# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

**பாடம் 6**

## இரட்சிப்பு

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

பாவமன்னிப்பு ........ 2

**பாவம் என்னும் பிரச்சனை ........ 2**

பாவம் - வரையறை ........ 3

பாவத்தின் தோற்றம் ........ 6

பாவத்தின் விளைவுகள் ........ 7

**தெய்வீக கிருபை ........ 9**

பிதா ........ 10

குமாரன் ........ 11

பரிசுத்த ஆவியானவர் ........ 12

**தனிநபர் பொறுப்பு ........ 14**

நிபந்தனைகள் ........ 14

உபாயங்கள் ........ 18

உயிர்த்தெழுதல் ........ 25

**சாபம் ........ 25**

**சுவிசேஷம் ........ 28**

பழைய ஏற்பாடு ........ 28

புதிய ஏற்பாடு ........ 32

இயேசுவின் உயிர்த்தெழுதல் ........ 35

**மீட்பு ........ 36**

தற்போதைய வாழ்க்கை ........ 36

இடைப்பட்ட நிலை ........ 37

புது வாழ்வு ........ 40

நித்தியமான ஜீவன் ........ 41

**கால நேரம் ........ 42**

**தரம் ........ 44**

**இடம் ........ 48**

முடிவுரை ........ 50





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

இந்தப் பாடங்கள் அனைத்திலும், *அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம்* என்பது ஆதி கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது அறிக்கையிட்ட விசுவாச அறிக்கையின் சுருக்கமே என்று குறிப்பிட்டிருக்கிறோம். அந்தச் சூழலில், அவர்கள் தங்கள் தனிப்பட்ட இரட்சிப்பின் மீதான விசுவாசத்தை வெளிப்படுத்தி அதிக உணர்வுபூர்வமாக அறிக்கையிட்ட காரியங்கள் விசுவாசப் பிரமாணத்தின் பகுதிகளாக மாறியிருக்கும் என்று நினைப்பது நம்மில் அநேகருக்கு எளிதானதாகும்.

அது நமக்கும் பொருந்தும் அல்லவா? நம்முடைய பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மகா பெரிய தேவனை நாம் நேசிக்கிறோம். அவர் உருவாக்கிய சபையை மதிக்கிறோம். ஆனால், இரட்சிப்பு நமக்குரியது என்னும் நற்செய்தியே நமக்குக் கிடைத்த மாபெரும் சந்தோஷம். தேவன் *நம்மை* நேசிக்கிறார், அவர் *நம்* பாவங்களை மன்னிக்கிறார், மற்றும் இவ்வுலகத்திலும் இனிவரும் உலகத்திலும் அவர் நமக்கு ஒரு அருமையான இலக்கை வைத்திருக்கிறார். இவைகளின் நிச்சயத்தினால் நாம் களிகூருகிறோம்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்னும் நம் தொடரின் ஆறாம் பாடமான இதன் தலைப்பு “இரட்சிப்பு” ஆகும். இந்தப் பாடத்தில் நாம், பாவமன்னிப்பு மற்றும் நித்திய ஜீவனைப் பற்றிய நற்செய்தியின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையிலுள்ள* விசுவாச கட்டுரைகளைப் பார்ப்போம்.

வேதத்தில், கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பிற்கு பல்வேறு அம்சங்கள் உண்டு என்பதைக் குறிக்கும் விதத்தில் “இரட்சிப்பு” என்னும் வார்த்தை பல விதங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நவீன கால கிறிஸ்தவர்கள் “இரட்சிப்பு” என்னும் வார்த்தையைப் பயன்படுத்தும்போது, கிறிஸ்து பாவநிவாரண பலியாக தம்மை மரிக்கக் கொடுத்து கிரயம் செலுத்தி பெற்றுத் தந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வது என்று பொதுவாக நாம் நினைக்கிறோம். அது, நாம் தேவனோடு ஒப்புரவாகி மறுபடியும் பிறப்பதில் தொடங்கி, வாழ்நாள் முழுவதும் பரிசுத்தமாகும் செயல்முறையைத் தொடர்ந்து, புதிய வானம் புதிய பூமியில் நாம் நிறைவாக மகிமையடையும்போது நிறைவடைகிறது.

இரட்சிப்பின் இந்த அம்சத்தை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பின்வருமாறு குறிப்பிடுகிறது:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பாவ மன்னிப்பு,
> சரீர உயிர்த்தெழுதல்,
> மற்றும் நித்திய ஜீவனை நான் விசுவாசிக்கிறேன்...

பாவமன்னிப்பு, உயிர்த்தெழுதல், நித்திய ஜீவன் என்னும் இம்மூன்று கருத்துக்களுமே வேதாகமம் கொடுக்கும் இரட்சிப்பின் விவரத்தை நிறைவு செய்து விடுவதில்லை. மாறாக, இவை தேவன் தனிப்பட்ட விசுவாசிகளை இரட்சிக்கும்போது என்ன செய்கிறார் என்னும் குறிப்பிட்ட அம்சங்களின் மீதான நம்பிக்கையை அறிக்கையிடும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* ஆரம்ப நிலை வாக்கியங்களாக உள்ளன.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* உள்ள இரட்சிப்பைப் பற்றி நாம் காணவிருக்கும் காரியங்கள் நம் இரட்சிப்பின் இந்த பரிமாணங்கள் அனைத்தையும் பற்றிய விவரங்களைக் கொடுக்கும். முதலாவது, பாவ மன்னிப்பைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, சரீர உயிர்த்தெழுதலின் கோட்பாட்டைப் பற்றிப் பார்ப்போம். மூன்றாவதாக, நித்திய ஜீவனின் இயல்பை பற்றியும் பேசவிருக்கிறோம். பாவமன்னிப்பு என்னும் நமக்கு மிகப் பரிச்சயமான பகுதியை முதலில் பார்ப்போம்.

# பாவமன்னிப்பு

பாவமன்னிப்புக்கு அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை கொடுக்கும் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள, ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய மூன்று காரியங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்: அவை, பாவமன்னிப்பை அவசியமானதாக்கும் பாவம் என்னும் பிரச்சனை, பாவமன்னிப்பை சாத்தியமாக்கும் தேவ கிருபை, மற்றும் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள நாம் செய்ய வேண்டியதான நம் தனிப்பட்ட பொறுப்பு ஆகியவையாகும். முதலில், நாம் பாவம் என்னும் பிரச்சனையைப் பற்றிப் பார்ப்போம்.

## பாவம் என்னும் பிரச்சனை

நம்முடைய பாவத்தினால் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்ப்பதே இயேசு மரித்ததற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று என வேதாகமத்தை நம்பும் கிறிஸ்தவர்கள் அறிவார்கள். பாவமானது நம்மை தேவனுடைய ஆசீர்வாதங்களிலிருந்து பிரித்து, அவரது சாபத்திற்குக் கீழாக்குகிறது. அதோடு, இந்தப் பிரச்சனையை நாமாக மேற்கொள்ளவும் முடியாது. பாவம் நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது என்பதே, நாம் பாவம் என்னும் பிரச்சனையைப் பற்றி பேசுவதன் அர்த்தமாகும்.. பாவத்திலிருந்து அல்லது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதன் விளைவுகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வதற்கு கிறிஸ்துவைத் தவிர வேறு வழியில்லை.

வேதவசனங்கள் பாவம் என்னும் பிரச்சனையைப் பற்றி போதிக்கும் காரியங்களை நாம் மூன்று பகுதிகளாக ஆய்வு செய்வோம். முதலாவது, பாவத்திற்கு நாம் ஒரு வேதாகம வரையறையைக் கொடுப்போம். அடுத்ததாக, மனித இனத்தில் பாவம் தோன்றிய விதத்தைப் பற்றிப் பேசுவோம். மூன்றாவதாக, பாவத்தின் விளைவுகளைப் பற்றிப் பார்ப்போம். பாவத்தின் வரையறையிலிருந்து தொடங்குவோம்.

## பாவம் - வரையறை

வேதாகமம் பாவத்தைப் பற்றி பல வழிகளில் பேசுகிறது. அநீதி, முரட்டாட்டம், மீறுதல், இடறல், தீமை, மற்றும் குறி தவறுதல் போன்ற பலவிதமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வேதாகமம் பாவமான காரியங்களை விவரிக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் பாவத்தைப் பற்றிய நம் புரிதலை விரிவாக்குகின்றன.

ஆனால், வேதம் பாவத்தைப் பற்றி மறைமுகமாகப் பேசும்போதும் – பாவத்திற்கான வரையறையைக் கொடுக்கும்போதும் மற்ற எல்லா வார்த்தைகளையும் விட ‘அநீதி’ என்ற வார்த்தையை அதிகம் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. வேதாகமத்தின் சொற்களஞ்சியத்தில், பாவம் என்பது அடிப்படையாக தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதாகிறது. 1 யோவான் 3:4 இல் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியது போல இது இருக்கிறது:

> பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1 யோவான் 3:4).

ரோமர் 7:9-25 மற்றும் 1 கொரிந்தியர் 15:56 ஆகிய வேத பகுதிகளிலும் இதேபோன்று பாவத்தை அநீதி என வலியுறுத்தக் காண்கிறோம். பாவத்தின் இந்த அடிப்படைக் கருத்து பல கிறிஸ்தவ பாரம்பரியங்களின் இறையியலிலும் பிரதிபலிக்கிறது.

அதற்கு உதாரணமாக, *வெஸ்ட்மினிஸ்டர் ஷார்ட்டர் கேட்டகிசம்* தன் 14 ஆம் கேள்விக்குக் கொடுக்கும் பதிலைக் கவனிப்போம். பாவம் என்பது என்ன? எனும் கேள்விக்கு பதிலாக:

> கேட்டகிசம்

இவ்வாறு பதில் தருகிறது:

> பாவம் என்பது தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு ஒத்திருப்பதில் குறைவுபடுவது அல்லது அதனை மீறுவதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த பதில் தேவனுடைய நியமத்தை மீறும் இரு பொதுவான வகை மீறுதல்களான நியாயப்பிரமாணத்திற்கு ஒத்திருப்பதில் குறைவுபடுதல், மற்றும் நியாயப்பிரமாணத்தை மீறுதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது என்பதைக் கவனியுங்கள்.

ஒரு வகையில், நியாயப்பிரமாணத்திற்கு ஒத்திருப்பதில் குறைவுபடுதல் என்பது, வேதம் கட்டளையிடுவதை செய்யத் தவறுவதாகும். இது 'புறக்கணிக்கும் பாவம்' எனப்படுகிறது. ஏனெனில், இதில் நாம் செய்ய வேண்டியதை செய்யாமல் விட்டுவிடுகிறோம் அல்லது புறக்கணித்து விடுகிறோம். மற்றொரு வகையில், நியாயப்பிரமாணத்தை மீறுவது என்பது வேதம் தடை செய்வதை செய்வதாகும். இத்தகைய நியாயப்பிரமாண மீறுதல் பெரும்பாலும் 'செய்யும் பாவம்' எனப்படுகிறது. ஏனெனில், இதில் வேதம் தடை செய்யும் ஒன்றை நாம் சிந்திப்பது, உணர்வது, அல்லது செய்வதன் மூலம் பாவம் செய்கிறோம்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை பாவத்தை வரையறுக்கும் தரமாகக் கொண்டால், தேவனுடைய நியாயப்பிரமாணம் என்பது ஏதோ ஒன்று அல்லது முறையற்றது அல்ல என்பதைக் குறிப்பிடுவது மிக முக்கியம். நியாயப்பிரமாணம் தேவனுடைய பரிபூரணமான குணாதிசயத்தையே பிரதிபலிக்கிறது. ரோமர் 7:12 இல் பவுல் நியாயப்பிரமாணத்தை விவரிக்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது (ரோமர் 7:12).

பவுல் இங்கு சொன்னது போல, தேவனுடைய கற்பனைகள் எப்போதும் தேவனைப் போலவே பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் உள்ளன. தேவனுடைய கற்பனைகள் எப்போதும் அவரது சுபாவத்தை ஒத்திருக்கின்றன.

இதனால்தான், நாம் தேவனை நேசிக்கிறோம் என்றால் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோம் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. நாம் தேவனை நேசித்தால், தேவனைப் பிரதிபலிக்கும் அவருடைய நியாயப்பிரமாணம் போன்ற காரியங்களையும் நேசிப்போம். இதனை நாம் உபாகமம் 5:10; 6:5-6, மத்தேயு 22:37-40, யோவான் 14:15-24 மற்றும் பல வேதப்பகுதிகளில் காணலாம். 1 யோவான் 5:3 இல் யோவான் என்ன எழுதியிருக்கிறாரென்று கவனியுங்கள்:

> நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் (1 யோவான் 5:3).

தேவன் மீதான நம்முடைய அன்பு அவருடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிவதில் வெளிப்படுகிறது. ஆகவே, நாம் அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயப்பிரமாணத்தை மீறும்போது, நமக்கு தேவன் மீது அன்பு இல்லை என்றாகிறது. அதனால் நாம் பாவம் செய்கிறோம்.

> வேதாகமத்தில், தேவனை நேசிப்பதற்கும், தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. தேவனை நேசிப்பது மட்டுமே தேவனை நேசிப்பதற்கான கட்டளையை நிறைவேற்றுவது ஆகிவிடாது என்பதை நாம் முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன். “நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்தால்” என்று வேதம் சொன்னபோதோ, அல்லது “நீங்கள் என்னில் அன்புகூர்ந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்று கிறிஸ்து சொன்னபோதோ, கடமைக்கு அதைச் செய்வதும், ஒரு வேலையாகச் செய்வதும் ஒருபோதும் மனதில் தோன்றவில்லை. ஆனால், அன்பும், தானாக முன்வந்து தேவனுக்குள் மகிழ்ந்து சுயத்தை அவரிடம் கொடுப்பதும் இருக்குமானால், விருப்பத்துடன் ஆழமாகக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருப்பது மிக இயல்பானதாகவும், சரியான முறையில் வெளிப்படுவதாகவும் இருக்கும். ஏனெனில், அது நீங்கள் அன்புகூர்ந்து மகிழ்ந்திருக்கும் இந்த தேவனைப் பிரியப்படுத்தும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டது; “தேவனுடைய வழி” அவருடைய குணாதிசயத்தைப் போலவே நம்பத்தக்கதும், நம்முடைய நன்மைக்கானதுமாக இருக்கும் என்ற நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டது.
>
> Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

தேவன் மீதான அன்பினிமித்தம் செயல்படத் தவறும்போது, அவருக்கு விரோதமாக கலகம் செய்து, அவருடைய நியாயப்பிரமாணத்தை மீறி, அவர் தந்திருக்கிற கட்டளையை தவறவிட்டு, அவருடைய பரிசுத்தமும், நீதியும், நன்மையுமான குணாதிசயத்தை கஷ்டப்படுத்தி, பாவம் செய்துவிடுகிறோம். ஆனால், நாம் தேவன் மீதான நம் அன்பினால் தூண்டப்படுவோமானால், நம்முடைய விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு மேலாக தேவனுடையவைகளை வைத்துவிடுவோம். அதன் விளைவாக, நம் வாழ்வில் பல பாவங்களையும் அவற்றின் கொடிய விளைவுகளையும் தவிர்க்கலாம்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் என்னும் பாவத்தைப் பற்றிய இந்த வரையறையுடன், மனித இனத்தில் பாவம் தோன்றியதைப் பற்றிப் பார்ப்போம்.

## பாவத்தின் தோற்றம்

ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவங்கள் நம்மில் அநேகருக்கு பரிச்சயமானவையே. நம்முடைய ஆதிப் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து, தடை செய்யப்பட்டிருந்ததான நன்மை தீமை அறியச் செய்யும் மரத்தின் கனியை புசித்தார்கள். வேதாகமக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இது ஒரு தனிப்பட்ட நபரின் செய்கை அல்ல. அது, மனித இனம் முழுவதும் பாவம் செய்து குற்றவாளிகள் ஆகவும், பாவத்தினால் அழியவும் காரணமாயிற்று. இறையியல் நிபுணர்கள் இதனைப் பொதுவாக *மனுக்குலம்* பாவத்தில் வீழ்ந்த சம்பவம் அல்லது வீழ்ச்சி என்று குறிப்பிடுகிறார்கள்.

தேவன் மனுக்குலத்தை சிருஷ்டித்தபோது, நாம் மிகவும் நன்றாக இருந்தோம் என்று ஆதியாகமம் 1:26-31 கூறுகிறது. இங்கு, "நல்லது" என்பதற்கு நாம் தேவன் விரும்பிய வண்ணமாகவே இருந்தோம் என்று அர்த்தமாகிறது. நம்முடைய முதல் ஆதிப் பெற்றோர் தார்மீகமாக தேவனுடைய தூய சாயலாகவும், பலுகிப் பெருகி தேவன் உண்டாக்கிய உலகத்தை நிரப்புவதன் மூலம் அவருக்கு ஊழியம் செய்ய ஏற்றவர்களாகவும் இருந்தார்கள்.

ரோமர் 5:12 இல் பவுல் குறிப்பிட்டது போல, வீழ்ச்சிக்கு முன்பு மனுக்குலத்தில் பாவம் என்பதே இல்லை. நாம் பாவமே செய்யாமலும், பாவம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலும், பாவத்தால் அழியாமலும், பாவத்தில் உழன்று கொண்டிருக்காமலும் இருந்தோம்.

ஆனால், அந்தப் பாவமற்ற நிலையிலும், பாவம் செய்வதற்கான வாய்ப்பும், திறனும் நமக்கு இருந்தது. தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து, ஏதேன் தோட்டத்தில் வைத்தபோது, அவர்களுக்கு அநேக காரியங்களை வெளிப்படுத்தினார். ஆனால், ஒரு கட்டளை மட்டும் துரிதமாக முன்னாகச் சென்று, தேவனைச் சேவிப்பதற்கான அவர்களுடைய விருப்பத்தை சோதிப்பதாக மாறியது. ஆதியாகமம் 2:16-17 இல், ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியச் செய்யும் மரத்தின் கனியைத் தவிர மற்றெல்லா மரங்களின் கனிகளையும் புசிக்க தேவன் அனுமதித்திருந்தார். இந்த நியமத்தை மீறுவது சாத்தியமானபோது, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பாவம் செய்யும் வாய்ப்பு உண்டானது.

ஆதியாகமம் 3:1-6 இல் நாம் பார்ப்பது போல, தடை செய்யப்பட்டிருந்த கனியை புசிக்கும்படி சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது என்பது மிகுந்த வருத்தத்துக்குரியது. பின்னர் ஏவாள் அந்தக் கனியில் சிறிது ஆதாமுக்கும் கொடுத்தாள், அவனும் அதைப் புசித்தான். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய நீதியின் நியமத்தை மீறி, மனமுவந்து பாவம் செய்தார்கள். அந்த சர்ப்பம் சாத்தானே என்று வெளிப்படுத்தின விசேஷம் 12:9 குறிப்பிடுகிறது, ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள் என்று 1 தீமோத்தேயு 2:14 கூறுகிறது. ஆனால், சாத்தானின் சோதனைகளோ அல்லது ஏவாளின் மதியீனமோ நம் ஆதிப் பெற்றோர் பாவம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்வதைத் தடுக்கவில்லை. அவர்கள் இருவரும் நன்மைக்கு பதிலாக தீமையைத் தெரிவு செய்ததால், குற்றம் செய்தவர்களானார்கள்.

இந்தச் சம்பவங்களில், பாவம் என்பது அடிப்படையில், வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தமாகிய தேவனுடைய நியமத்தை மீறுவதே என்பதை மீண்டும் பார்க்கிறோம். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட நியமத்திலிருந்து வித்தியாசமாக நாம் யோசிக்கும்போது, பேசும்போது அல்லது செய்யும்போது, நாம் நன்மைக்கு பதிலாகத் தீமை செய்வதைத் தெரிவு செய்கிறோம் என்று அர்த்தம். பாவம் செய்யும்படி நாம் தந்திரமாக வஞ்சிக்கப்பட்டாலும், நாம் செய்ததற்கு நம்மிடம்தான் தேவன் கணக்குக் கேட்பார். அதனால்தான், தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் ஒளித்து வைப்பது நமக்கு உதவியாக இருக்கிறது – அதை நாம் அறிவதற்காக மட்டும் அல்ல, அதை நேசிப்பதற்காகவும் நம் மனதில் வைத்து வைக்கிறோம். தேவனுடைய நியமத்தை நாம் அறிந்து கொள்ளும்போது, நாம் வஞ்சிக்கப்படாதபடி பாவத்தை உணர்ந்து கொள்ள உதவியாக இருக்கிறது. அதோடு, நாம் தேவனுடைய நியமத்தை அறிந்திருக்கும்போது, அவருக்குக் கீழ்ப்படிவது எளிதாகிறது.

பாவத்தின் வரையறையையும் தோற்றத்தையும் பற்றிப் பார்த்த நாம் அதன் விளைவுகளைப் பற்றி அறிய ஆயத்தமாயுள்ளோம்.

## பாவத்தின் விளைவுகள்

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பின்னர், தேவன் மனித இனம் முழுவதையும் நியாயந்தீர்த்து, சபித்தார். இந்த சாபம் அவர்களுடைய ஜீவியத்தின் எல்லா அம்சங்களையும் பாதித்தது. அதனால், யோவான் 5:24-25, எபேசியர் 2:1-5, கொலோசெயர் 2:13-14 மற்றும் வேதம் முழுவதும் பேசப்படும் ஆவிக்குரிய மரணம் உடனடியாக நிகழ்ந்தது. அது, எரேமியா 17:9 மற்றும் ரோமர் 7:18–8:11 இல் குறிப்பிடப்பட்டிருப்பது போல, நம் சரீரத்தையும், ஆத்துமாவையும், நம்முடைய ஜீவியம் முழுவதையும் மாசுபடுத்தியது. இறுதியில் அது, ஆதியாகமம் 3:19 மற்றும் ரோமர் 5:12 இன்படி சரீர மரணத்திற்கு வழிவகுத்தது. மத்தேயு 5:29-30 போன்ற வேதப்பகுதிகளில் நாம் காண்பது போல, பாவமானது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு நம்மை உட்படுத்தி, நரகத்தில் நித்தியமாகப் பாடுகளை அனுபவிக்கச் செய்கிறது.

1834 - 1892 இல் வாழ்ந்த சார்லஸ் ஸ்பர்ஜன் என்னும் பிரசித்தி பெற்ற போதகர் *சாபம் நீங்கியது* என்னும் தம் பிரசங்கத்தில் தேவன் ஆதாம், ஏவாளுக்குக் கொடுத்த சாபத்தைப் பற்றிப் பேசுகிறார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.

> சாபத்தில் இருப்பது என்ன? மரணம், அதாவது சரீர மரணம் இதில் அடங்கியுள்ளது … ஆவிக்குரிய மரணமும், ஆதாமுக்கு இருந்த உள்ளான ஜீவனின் மரணமும் – அதாவது பிரிந்து

> சென்றதும் பரிசுத்த ஆவியால் மட்டுமே மீட்டெடுக்கபடக் கூடியதான ஆவியின் ஜீவனும் இதில் அடங்கும் ... கடைசியாக, எல்லாவற்றையும் விட மோசமான நித்திய மரணமும் இதில் அடங்கும் ... அந்த பயங்கரமானதும் மோசமானதுமான ... ”நரகம்” என்கிற வார்த்தையில் எல்லாம் சேரும் .

ஆதாம், ஏவாளுடைய பாவத்தின் விளைவுகள் அவர்கள் மூலமாக இயற்கையாக உருவாகும் சந்ததியாக உருவான மனித இனம் முழுவதிலும் பரவியது என்பது அதிலும் மோசமான விஷயமாகும். இப்படி பாவம் உலகளாவிய விதத்தில் விரிவடைந்ததைப் பற்றி 1 இராஜாக்கள் 8:46, ரோமர் 3:9-12, கலாத்தியர்3:22, மற்றும் எபேசியர் 2:3 போன்ற வேதப்பகுதிகளில் பார்க்கிறோம். ரோமர் 5:12-19 இல் பவுல் ஆதாமின் பாவத்தைப் பற்றி பேசிய விதத்தைக் கவனியுங்கள்:

> இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று... அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள் (ரோமர் 5:12, 19).

நாம் முந்தைய பாடத்தில் பார்த்தது போல, ஆதாம்தான் மனித இனம் முழுவதற்குமான உடன்படிக்கையின் தலைவனாக இருந்தான். அதனால் ஆதாமின் பாவம் அவனுடைய சந்ததி முழுவதற்கும் பரவியது என்று பவுல் போதித்தார். அதன் விளைவாக, நாமும் இயல்பிலேயே பாவிகளாக இருக்கிறோம். இந்த உலகத்தில் பிறக்கும்போதே வேதனைக்கும், கஷ்டத்திற்கும் உட்பட்டு, சரீர மரணத்திற்கென்று நியமிக்கப்பட்டவர்களாகவும், ஆவியில் மரித்தவர்களாகவும் பிறக்கிறோம்.

> இதை மிகைப்படுத்துவது கடினம்; பாவத்தின் முழு விளைவுகளையும் விளங்கிக் கொள்வது கூட சாத்தியமற்றது. ஆனால் நம் பாவம் சிருஷ்டிகருக்கு எதிரான கலகமாக இருக்கிறது. அது, அவருடைய மகிமையைப் பறிப்பதற்கான முயற்சியாகவும், அவருடைய நியமத்தை மீறுவதாகவும், அவருடைய மகிமையற்றவர்களாய் காணப்படுவதாகவும் உள்ளது. எல்லா விதங்களிலும் நாம் நம்மை தேவனுக்கு விரோதமாக வைத்துக் கொள்கிறோம். தேவன் பரிசுத்தராக இருப்பதால், பாவம் தேவனுடனான நம் உறவை பாதிக்கிறது. அவரால் பாவத்தைப் பார்க்க முடியாது. அவருடைய பரிசுத்தத்தினால், அவர் பாவத்தின் மீது தம் கோபத்தை ஊற்ற வேண்டியதாக இருக்கிறது. ஆகவே,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மனிதனின் பாவத்தன்மையை பார்க்கும்போது, நம்முடைய பிரச்சனையைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அது உள்ளடக்கியுள்ளது. அது நம்மைப் பற்றி நாமறிய வேண்டிய அனைத்தையும் கூட கொண்டுள்ளது. பாவம் என்பது, நாம் கண்ணாடியில் பார்ப்பதை விளங்கிக் கொள்ளவும், நாம் எப்படி இருக்க வேண்டுமென்று அறியவும் உதவும் மூன்றெழுத்து மனோதத்துவமே. மேலும் அது, இந்த நிர்ப்பந்தமான நிலையிலிருந்து நம்மை நாமே விடுவித்துக் கொள்ள வழியே இல்லை என்றும் அது நமக்கு நினைவுறுத்துகிறது. தேவனால் மட்டுமே அதைச் செய்ய முடியும், அவர் கிறிஸ்துவின் மூலம் அதைச் செய்கிறார்.
>
> Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

பாவம் என்னும் பிரச்சனை மிகத் தீவிரமானது. மனுக்குலம் முழுவதும் தொலைந்து போய், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது. நம்மை நாமே மீட்டுக் கொள்ள வழியே இல்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் நாம் எந்நாளும் பாடுபடும்படி விடப்பட்டோம். அவருடைய தயவை மீண்டும் பெறவோ அல்லது நம் பாவத்திற்கு பரிகாரம் செய்வதற்கோ வழியே இல்லை. தேவனுடைய கிருபையான மன்னிப்பைத் தவிர இரட்சிக்கப்படுவதற்கு வேறு நம்பிக்கையே இல்லை.

பாவம் என்னும் பிரச்சனையைப் பற்றிப் பார்த்த நாம், பாவமன்னிப்பை சாத்தியமாக்கும் தேவ கிருபையினால் பாவமன்னிப்பு பெறுவதைப் பற்றி அறிய வேண்டும்.

## தெய்வீக கிருபை

தேவன் தம்முடைய இரக்கத்தினால் மனித இனம் முழுவதும் பாவத்தின் சாபத்திலேயே இருந்துவிடுவதை விரும்பவில்லை. மனுக்குலம் பூமியை நிரப்பி, அதை ஆளுகை செய்து, தாம் பிரசன்னமாவதற்குத் தகுந்ததொரு ராஜ்யமாக மாற்ற வேண்டுமென்று அவர் திட்டமிட்டார். ஆகவே, பாவப் பிரச்சனையைத் தீர்க்க ஒரு மீட்பரை அனுப்பினார். அந்த மீட்பர் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே.

இயேசு கிறிஸ்து நம்முடைய மீட்பராக நம் பாவம் மற்றும் அழிவிலிருந்து நம்மை மீட்கிறார்; அவர் நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கிக் கொள்கிறார்; இந்த உலகத்தை அவருடைய பூமிக்குரிய ராஜ்யமாக மாற்றும் நம்முடைய திறமையை அவர் மீட்கிறார். நம்முடைய இரட்சிப்புக்கு நம்மைத் தகுதியாக்க நம்முடைய திறமைகளை சார்ந்திருப்பது தேவ திட்டம் அல்ல. மாறாக அது,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் தகுதி பார்க்காமல் நம்முடைய சிறப்பு பிரதிநிதியான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு அருள்கிறதான தேவ கிருபையையே சார்ந்துள்ளது. ரோமர் 3:23-24 இல் நாம் அதைத்தான் வாசிக்கிறோம்:

> எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:23-24).

தேவ கிருபையின் கிரியையான பாவமன்னிப்பில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் திரித்துவத்தின் நபர்களும் ஈடுபட்டுள்ளனர். அதைத் தொடங்கியவர் பிதா.

## பிதா

> இரட்சிப்பு என்பது மூவர் இணைந்து செய்வதாகும்: பிதா அதைத் தொடங்குகிறார், குமாரன் நிறைவேற்றுகிறார், ஆவியானவர் அதைச் செயல்படுத்துகிறார். பிதா-குமாரன் உறவைப் பற்றியோ அல்லது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் உறவைப் பற்றியோ யோசிக்கும்போது, இவர்கள் மூவருமே நம்முடைய இரட்சிப்பின் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இம்மூவருமே கோபத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் தாங்கிப் பிடித்து, கிருபை, அன்பு மற்றும் இரக்கத்தினால் செயல்படுகிறார்கள். ஆகவே, இரட்சிப்பைத் தொடங்கியவர் பிதாதான் என்றாலும், அதை அவர் குமாரனையும் பரிசுத்த ஆவியானவரையும் சாராமல் தனியே செய்வதில்லை.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

பாவமன்னிப்பு பிதாவிடமிருந்து தொடங்கியது, ஏனெனில் அவரே அதைத் திட்டமிட்டவர். பிதா தம் குமாரனை உலகத்திற்கு அனுப்பி, அவரை உலக மீட்பராக நியமித்தார் என்று புதிய ஏற்பாடு வெளியரங்கமாக போதிக்கிறது. இதனை நாம் யோவான் 3:16-18, அப் 2:34-36, மற்றும் எபிரெயர் 3:1-2 இல் காண்கிறோம்.

இயேசுவுக்குத் தம் ஜனத்தை மீட்கும் அதிகாரமளித்து அவரை பிதா அங்கீகரித்தார் என்றும், சிலுவையில் இயேசு செலுத்திய பலியை பாவத்திற்குப் பரிகாரமாக ஏற்றுக் கொள்வதாகவும் பிதா வாக்குப்பண்ணியிருக்கிறார் என்றும் புதிய ஏற்பாடு போதிக்கிறது. யோவான் 10:14-18, கொலோசெயர் 1:18-20,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் எபிரெயர் 2:10 போன்ற வேதப்பகுதிகளில் பிதாவின் பங்கைப் பற்றி வாசிக்கிறோம்.

பிதாவே இயேசுவை பலியாகச் செலுத்தினார் என்று ரோமர் 3:25 கூறுகிறது. அங்கே பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:25).

பிதாவே மீட்பின் மாபெரும் கைவினைஞர். நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்பது கிருபை நிறைந்த அவரது திட்டமும், இரக்கம் நிறைந்த அவரது விருப்பமுமாக இருக்கிறது. இரட்சிப்பை சாத்தியமாக்குவதும், உறுதி செய்வதும் அவரது அதிகாரமே.

> இயேசு அன்பானவர் என்றும், பிதா அன்பற்றவர் என்றும் சொல்வது போல சிலுவையில் இயேசு தம் மக்கள் மீதான தம் பரம பிதாவின் கோபத்தைத் தணிக்க முற்பட்டதாகச் சொல்வது இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரணச் செய்கையில் நடப்பதைப் பற்றிய மிகத் தவறான கருத்தாக இருக்கிறது. சிலுவையில் இயேசு செய்தது உண்மையில் பிதா தம் மக்கள் மீது ஏற்கனவே கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது. இயேசு இந்த உலகத்திற்கு வருகிறார், மற்றும் அவர் சிலுவை சுமக்கக் காரணம் பிதாவின் அன்பே என்றும் புதிய ஏற்பாடு மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைப் பற்றி யோசியுங்கள். நம்மில் பெரும்பாலானோர் நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் முதன்முதலில் மனப்பாடம் செய்யும் வசனம் யோவான் 3:16. இவ்வசனம், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை … அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்பதை வலியுறுத்துகிறது. இந்த வசனத்தில் யாருடைய அன்பைப் பற்றிச் சொல்லப்படுகிறது? இயேசுவின் அன்பைக் குறைத்துச் சொல்ல வேண்டும் என்பது எவ்விதத்திலும் என் நோக்கமல்ல. ஆனால், குமாரனைக் கொடுத்தது பரம பிதாவின் அன்பே என்பதுதான் இந்த வசனத்தில் வலியுறுத்தப்படுகிறது.
>
> Dr. ஜே. லிகோன் டங்கன் III

## குமாரன்

நம்முடைய பாவமன்னிப்பை நிறைவேற்றுகிற தேவ கிருபையில் குமாரனும் இடம்பெற்றிருக்கிறார், அவரே நம் மீட்பர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறும்படி குமாரன் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டு, மனிதரின் பாவங்களுக்கான பரிகாரமாகும்படி நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவாகவும் இயேசுவாகவும் மனுவுருவெடுத்து வந்தார். இந்தப் போதனையை நாம் ரோமர்3:25-26, எபிரெயர் 2:14-17 மற்றும் 10:5-10 போன்ற பல வேத பகுதிகளில் காணலாம்.

இயேசு பாவிகளுக்குப் பதிலாக சிலுவையில் மரித்து பாவத்தை நிவிர்த்தி செய்தார். நம்முடைய பாவத்தினால் உண்டான தேவனுடைய சாபத்தை அவர் ஏற்றுக் கொண்டார். நாம் இனி பாவிகள் என்று எண்ணப்படாமல், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் பிள்ளைகள் என்று எண்ணப்படும்படி, அவருடைய பரிபூரணமான நீதி நமக்குக் கிடைத்துவிட்டது. இக்கருத்து காணப்படும் ஒருசில பகுதிகள்: யோவான் 10:14-18, கலாத்தியர் 2:20, 2 கொரிந்தியர் 5:21, மற்றும் எபிரெயர் 10:9-14 ஆகும்.

பவுலும் எபேசியர் 1:7 இல் இவ்வாறு எழுதுகிறார்:

> அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:7).

தேவன் நம் பாவங்களைப் புறக்கணித்து விட்டதால் அல்ல, மாறாக நம் பாவங்களை அவர் கிறிஸ்துவுக்குள் தண்டித்துவிட்டார் என்பதாலேயே அவை நமக்கு மன்னிக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் வேதம் நம்முடைய இரட்சிப்பில் இந்த அளவிற்கு தைரியமாக இருக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகிறது.

பிதா, மற்றும் குமாரனின் இந்தக் கிரியைகளைச் சார்ந்திருப்பதுடன், பரிசுத்த ஆவியின் தெய்வீக கிருபையினாலும் நமக்குப் பாவமன்னிப்பு கிடைக்கிறது.

## பரிசுத்த ஆவியானவர்

திரித்துவத்தில் பரிசுத்த ஆவியானவரே உண்மையில் பாவமன்னிப்பை நம் வாழ்க்கையில் செயல்படுத்தும் நபராக இருக்கிறார். பாவநிவாரணத்திற்கு பிதா திட்டமிட, குமாரன் அதை நிறைவேற்றினார். அதேசமயம், பரிசுத்த ஆவியானவர் தம் கிரியையைச் செய்யும் வரை நம்முடைய பாவங்கள் உண்மையில் மன்னிக்கப்படுவதில்லை.

நாம் விசுவாசிக்கத் தொடங்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நாம் அதுவரை செய்த பாவங்களை மன்னித்து நம்மை தேவனுடன் ஒப்புரவாக்குகிறார். இயேசு யோவான் 3 : 5 - 8 இல் குறிப்பிட்டது போல, ஆவியானவர் நம் ஆவியை புதுப்பித்து நமக்கு ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்க்கையைக் கொடுக்கிறார். அப்.11:18 இதை “ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல்” என்கிறது. ஏனென்றால், விசுவாசித்து நாம் மறுபடியும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிறக்கும்போது எப்போதுமே அதில் துக்கமும், நம்முடைய பாவ நிலைமையை அறிக்கையிடுவதும் அடங்கியிருக்கும். இக்கருத்து 1 கொரிந்தியர் 6:11 போன்ற அநேக வேதப்பகுதிகளில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

ஆவியானவர் நம் வாழ்நாள் முழுவதும் பாவமன்னிப்பை நமக்குச் செயல்படுத்துகிறார். அவரே நம் விசுவாசத்தைக் காக்கிறவர், அவரே நம்மை அனுதினமும் மனந்திரும்பச் செய்கிறவர் மற்றும் அவரே பாவமன்னிப்பை தொடர்ச்சியாக நம்மில் செயல்படுத்துகிறார். இதனை நாம் ரோமர் 8:1-16 மற்றும் கலாத்தியர் 5:5 ஆகிய பகுதிகளில் காணலாம். இதற்கு உதாரணமாக, பவுல் 2 தெசலோனிக்கேயர் 2:13 இல் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்:

> நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டார் (2 தெசலோனிக்கேயர் 2:13).

இங்கு, நம்மை பாவம் மற்றும் அநீதியிலிருந்து சுத்திகரிக்கிற ஆவியின் கிரியை, அதாவது பாவமன்னிப்பை நம்மில் செயல்படுத்துகிற ஆவியானவரின் கிரியையினால் விசுவாசிகள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று பவுல் எழுதியுள்ளார். நாம் தொடர்ந்து சத்தியத்தை விசுவாசிக்கும்போது, ஆவியானவர் தொடர்ந்து பாவமன்னிப்பை நம்மில் செயல்படுத்துகிறார்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூவருமே நம்மை இரட்சிக்கும் கிருபையை செயல்படுத்திக் காண்பிக்கிறார்கள். இதனால் நம் வாழ்வில் குறைந்தது மூன்று தாக்கங்கள் ஏற்படுகின்றன: முதலாவது, நாம் பாவம் செய்து, தேவனிடம் மன்னிப்பையும், இரட்சிப்பின் மற்ற அம்சங்களையும் வேண்டிக்கொள்ளும்போது, மூன்று தெய்வீக நபர்களிடமும் நம் விண்ணப்பங்களை தெரிவிக்கும் உரிமை நமக்குண்டு. இரண்டாவது, இந்த ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளும்போது, தேவத்துவத்தில் இருக்கும் இம்மூன்று நபர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். மூன்றாவதாக, திரித்துவத்தின் மூன்று நபர்களும் நம்மை நேசித்து, நம்முடைய மீட்பை உறுதிப்படுத்த கிரியை செய்கிறார்கள் என்பதில் நாம் திடநம்பிக்கை கொண்டிருக்கலாம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் பாவமென்னும் பிரச்சனையைத் தீர்க்கவும், நம்முடைய நலனுக்காகவும் சேர்ந்து கிரியை செய்கிறார்கள்.

பாவம் என்னும் பிரச்சனை மற்றும் தேவ கிருபை என்னும் கண்ணோட்டங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பற்றி பார்த்த நாம் பாவமன்னிப்பில் தனிநபரின் பங்கைப் பற்றி பேசவிருக்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தனிநபர் பொறுப்பு

தேவன் எல்லோருடைய பாவங்களையுமே மன்னித்துவிடுவதில்லை என்று வேதம் தெளிவாக போதிக்கிறது. சிலர் மட்டுமே மன்னிக்கப்படுகிறார்கள், மற்றும் சிலர் மன்னிக்கப்படுவதில்லை. ஏன் அப்படி? மனிதக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், சாதாரணமாக பாவமன்னிப்பு என்னும் செயல்முறையில் தனிநபர் பொறுப்பும் உள்ளது என்பது காரணமாக இருக்கிறது. பொதுவாக சொன்னால், தங்களுடைய அந்தப் பொறுப்பை நிறைவேற்றுபவர்கள் மன்னிக்கப்படுகிறார்கள், அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறவர்கள் மன்னிப்பைப் பெறுவதில்லை.

தனிநபர் பொறுப்பு பற்றி நாம் இரு பகுதிகளாகப் பார்க்கவிருக்கிறோம். முதலில், பாவமன்னிப்பிற்கான சாதாரணத் தேவைகளாக வேதம் அடையாளம் காண்பிக்கும் ஒருசில நிபந்தனைகளை குறிப்பிடுவோம். இரண்டாவதாக, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் வழிகளைப் பற்றி பார்ப்போம். வேதம் பாவமன்னிப்புடன் தொடர்புபடுத்தும் நிபந்தனைகளை முதலில் பார்ப்போம்.

## நிபந்தனைகள்

வேதம் பாவமன்னிப்பிற்கான இரு முக்கிய நிபந்தனைகளைப் பற்றிப் பேசுகிறது. முதலாவது, பாவமன்னிப்பின் முன் நிபந்தனையாக அது குறிப்பிடுவது தேவன் மீதான விசுவாசம் ஆகும். வேதத்தில், விசுவாசம் என்பது பன்முகம் கொண்ட ஒரு கருத்தாக உள்ளது. ஆனால், இந்தச் சூழலில், தேவன் மீதான விசுவாசத்தைப் பற்றிப் பேசும்போது, பின்வருவதை நாம் மனதில் கொண்டிருக்கிறோம்:

> தேவனுடைய தெய்வீக சர்வ வல்லமையை ஏற்றுக்கொள்ளுதல், பற்றுறுதியுடன் அவருக்குப் பணிந்திருத்தல், மற்றும் நம்முடைய மீட்பர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் அவர் நமக்கு இரக்கம் காண்பிப்பார் என்று நம்புதல்.

நவீன காலத்தவர்களுக்கு இது சற்று வினோதமானதாக இருக்கலாம் என்றாலும், இத்தகைய விசுவாசத்தை வேதம் பெரும்பாலும் “தெய்வ பயம்” என்கிறது.

உதாரணமாக, பாவமன்னிப்பின் நிபந்தனையுடனான இயல்பை சங்கீதம் 103:8-13 பின்வருமாறு விவரிக்கிறது:

> கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (சங்கீதம் 103:8-13).

தேவனுக்கு பயந்தவர்கள் மட்டுமே பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள், அவர்களுடைய மீறுதல் மட்டுமே நீக்கப்படுகிறது என்றிருப்பதைக் கவனியுங்கள்.

இதே கருத்தை வேதம் முழுவதும் காணலாம். உதாரணமாக, தேவனைத் தேடும்படி தங்கள் இருதயத்தை நேராக்குபவர்களை கர்த்தர் மன்னிக்கிறார் என்று 2 நாளாகமம் 30:18-19 கூறுகிறது. கர்த்தரை உணர்ந்து அறிபவர்கள் மட்டுமே பாவமன்னிப்பு வேண்டி அவரிடம் திரும்புவார்கள் என்று இயேசு மாற்கு 4:12 இல் கூறியுள்ளார். கர்த்தருடைய மகிமை மற்றும் வல்லமையின் சத்தியத்தைக் காணும்படி கண் திறக்கப்பட்டவர்களால் மட்டுமே பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 26:17-18 குறிப்பிடுகிறது.

பாவமன்னிப்பிற்கான இரண்டாவது சாதாரண நிபந்தனையாக வேதம் கூறுவது நொறுங்குண்ட மனம் ஆகும். நொறுங்குண்ட மனம் என்பது:

> பாவத்தைக் குறித்த உண்மையான துக்கம்; தேவனுடைய நியமத்தை மீறியதைக் குறித்த உண்மையான வருத்தமாகும்.

அது, பிடிபட்டதாலோ அல்லது தண்டிக்கப்பட்டதாலோ வரும் துக்கம் அல்ல, மாறாக கர்த்தருக்கு பரிசுத்தமும், அவரைக் கனம் பண்ணத் தவறியதால் உண்டாகும் நொறுங்குண்ட மனமும் அவசியமாகும்.

> நொறுங்குண்ட மனம் என்பது, நீங்களும் நானும் செய்த பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வு ஆகும். இங்கு, பத்சேபாளுடன் பாவம் செய்த பின்னர் இருந்த தாவீதின் நிலையைப் பற்றி நினைக்கிறேன். ஆம், அவன் பத்சேபாளுக்கு விரோதமாகப் பாவம் செய்தான். பத்சேபாளின் கணவனுக்கு விரோதமாகவும் பாவம் செய்தான். பழைய ஏற்பாட்டு சபைக்கு விரோதமாகவும் அவன் பாவம் செய்தான் என்பது உண்மைதான். ஆனால் முடிவில் அவன் தேவனிடம், “உமக்கு விரோதமாகவே நான் பாவம் செய்தேன்” என்று சொன்னான். இங்கு அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> **நொா**றுங்குண்ட இருதயத்தை நீங்கள் பார்க்கலாம். இக்காலத்தில் இவ்வுணர்வு “நொறுங்குண்ட மனம்” எனப்படுகிறது. தேவனுடைய வார்த்தையானது ஆவியானவர் மூலமாக தேவ பிரசன்னத்தில் நம்மை உடைக்க வேண்டும்.
>
> Dr. டெரெக் தாமஸ்

உதாரணமாக, 2 சாமுவேல் 11 இல், தாவீது பத்சேபாளுடன் விபச்சாரம் செய்த பின்னர் மனஸ்தாபப்படாமல், அவள் கர்ப்பமானதை மறைக்கும்படி, அவளுடைய கணவனான உரியாவைக் கொல்ல ஏற்பாடு செய்தான். பத்சேபாள் கருவுற்றிருந்த காலம் முடிந்து அவளுக்குக் குழந்தை பிறக்கும் வரை அவருக்கு எவ்வித துக்கமும் இல்லை. அந்த சமயத்தில் நாத்தான் தீர்க்கதரிசி தாவீதின் பாவத்தை உணர்த்தினார். இதை நாம் 2 சாமுவேல் 12 இல் பார்க்கிறோம். அதன் பின்னர்தான் தாவீது தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு மிகவும் மனஸ்தாபப்பட்டார். உண்மையான நொறுங்குண்ட மனதுடன் அவர் 51 -ஆம் சங்கீதத்தை எழுதினார். அது அவருடைய துக்கம் மற்றும் வருத்தத்தின் ஆழத்தை வெளிப்படுத்தும் மனந்திரும்புதலின் மாபெரும் சங்கீதமாக உள்ளது. சங்கீதம் 51:6,17 இல் தாவீது எப்படி எழுதியிருக்கிறான் என்று கவனியுங்கள்:

> தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங்கீதம் 51:6,17).

தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள பாவத்தைப் பற்றிய தேவனுடைய கண்ணோட்டத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதை தாவீது உணர்ந்தான். அவன் தான் செய்ததை வெறுத்து, அதற்காக உண்மையில் மனம் வருந்த வேண்டும்.

கபடமில்லாதவர்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கிறது என்று சொல்லும் சங்கீதம் 32:1,2 லும் இதேவிதமாக நொறுங்குண்ட மனம் வலியுறுத்தப்படுகிறது. தங்கள் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களுக்கு தேவனிடத்தில் இரக்கம் கிடைக்கிறது என்று ஏசாயா 55:7 சொல்வதும் இதைப் பற்றியதே ஆகும். தங்கள் பாவங்களைக் குறித்து மனக் கடினம் அடைந்தவர்களுக்கு பாவமன்னிப்பு அருளப்படுவதில்லை என்று எரேமியா 5:3 விலும் பார்க்கிறோம்.

> தேவனுடைய பரிசுத்தத்தில் நம் மனதைச் செலுத்தி, மனந்திரும்புதலில் முக்கிய பகுதியான நொறுங்குண்ட மனதை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன். கீழ்ப்படியாதவர்களுடன் ஐக்கியம் கொள்ள முடியாதவரும், கீழ்ப்படியாமையை நியாயந்தீர்ப்பவரும்,

> மீறுகிறவர்களைத் தண்டிப்பவருமாகிய தேவனைப் பற்றி ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை வேதாகமம் கூறுவதை தியானிப்பதன் மூலம் நாம் அதைச் செய்யலாம். அதுவே தேவனுடைய பரிசுத்தத்தின் சாராம்சமாகும். தேவனுடைய பரிசுத்தத்தைப் பற்றி தியானிக்கும் நாம் நம்முடைய வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்த்து, நாம் மீறிய, கீழ்ப்படியாதிருந்த, தேவன் சொன்னதை மதிக்காமல் அலைந்து திரிந்த, மற்றும் தேவனை கனவீனப்படுத்தும் விதத்தில் நம் வாழ்க்கையைக் குலைத்த சில காரியங்களைப் பற்றி யோசித்துப் பார்ப்போம். அதன் பின்னர், அதற்காக எனக்கு வர வேண்டிய தண்டனை அனைத்தும் கிறிஸ்துவின் தோள்மீது சுமத்தப்பட்டு, அவர் அதைச் சுமந்து தீர்த்தார் என்பதையும் நினைத்துப் பாருங்கள். அதன் மூலம் என்னுடைய பாவங்களுக்கு மனுவுருவெடுத்து வந்த தேவகுமாரன் எனக்காக மரிப்பதால் மட்டுமே பரிகரிகாரம் செலுத்த முடியும் என்கிற அளவுக்கு என் பாவங்கள் துக்கத்துக்கு ஏதுவானவையாக இருக்கின்றன என்று அறிகிறேன். தேவனுடைய பரிசுத்தத்தின் வெளிச்சத்தில் என் பாவங்கள் எத்தனை துக்கமானவை என்றும், அதைப் போக்க செய்ய வேண்டியதாக இருந்த காரியத்தையும் நான் உணரும்போது, என்னுடைய பாவத்தினால் ஏற்பட்ட துக்கத்தின் வேதனை இன்னும் அதிகரிக்கிறது, என் மனம் ஆழமாக நொறுங்குண்டு போகிறது. அதிலிருந்து பரிசுத்தமாக வாழ்வதற்கு தேவனிடம் என்னை மீண்டும் மீண்டும் அர்ப்பணித்து, பரிகாரம் செலுத்தத் தேவையான அளவுக்கு நான் செய்த பாவங்களைக் குறித்து எந்த அளவுக்கு வருந்துகிறேன், மற்றும் அதை வெறுக்கிறேன் என்று அவரிடம் சொல்ல உண்மையாக மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறேன்.

Dr. ஜே. ஐ. பேக்கர்

விசுவாசம் மற்றும் நொறுங்குண்ட மனம் என்னும் நிபந்தனைகள் விசுவாசிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மிகவும் அவசியம். இந்த நிபந்தனைகள் கிறிஸ்துவைத் தங்கள் கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் பாவம் மன்னிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு புதுவாழ்வைத் தொடங்குவதற்கு நல்ல வாய்ப்புகளாக அமைகின்றன. ஏற்கனவே கர்த்தருக்குச் சொந்தமானவர்களாக இருக்கும் நமக்கு அவை, நாம் மாறாமல் சீரான விசுவாசத்துடன் இருக்க வேண்டும் என்பதையும், அனுதினமும்

பாவமன்னிப்பையும், சுத்திகரிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக நாம் தொடர்ந்து செய்யும் பாவங்களுக்காக உண்மையில் மனஸ்தாபப்பட வேண்டும் என்பதையும் நினைவூட்டுவதாக இருக்கின்றன.

பாவமன்னிப்பிற்கு இயல்பான நிபந்தனைகளாக தேவன் கிரியை செய்யும் விசுவாசமும், நொறுங்குண்ட மனமும் அவசியமாகின்றன என்பதைப் பார்த்த நாம் இனி பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான சாதாரண வழியைப் பற்றிப் பார்ப்போம்.

## உபாயங்கள்

சிலநேரங்களில், கிறிஸ்தவர்கள் கிருபையின் உபாயங்களுக்கும் கிருபையின் அடித்தளத்திற்குமான வித்தியாசத்தைக் காணத் தவறிவிடுகிறார்கள். அதன் விளைவாக, கிருபையின் உபாயங்கள் மூலமாக கிருபையை நாம் சம்பாதித்துக் கொள்ளலாம் அல்லது தேவன் நம்மீது கிருபையாக இருக்கும்படி அவரை நிர்ப்பந்திக்கலாம் என்று நினைத்துவிடுகிறார்கள். ஆகவே, உபாயங்களுக்கும், அடித்தளத்திற்கும் இடையேயான வித்தியாசத்தைத் தெளிவாக அறிவது மிகவும் அவசியம். இந்த வித்தியாசத்தை அறிந்து கொள்ள, ஒருவருக்கு ஏற்பட்ட காயங்கள் சுகமாக அவருக்கு சிகிச்சை தேவைப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த சிகிச்சைக்கு அதிகம் செலவாகும் என்பதால், யாரோ ஒருவர் அவருக்காக அந்தத் தொகையைச் செலுத்துகிறார். காயமடைந்த நபர் சிகிச்சைக்குப் பின்னர் முற்றிலும் குணமடைகிறார். ஆனால், அவர் சுகமடைந்ததற்கு ஆதாரமாக இருந்தது மற்ற நபர் அவருக்காக செலுத்திய தொகையே.

ஆகவே, அடித்தளம் அல்லது ஆதாரம் என்பது ஒரு செயல் அல்லது விளைவிற்கான அஸ்திபாரம் அல்லது தகுதி என்றும், அந்தச் செயல் அல்லது விளைவை உண்டாக்க உதவும் கருவி அல்லது செயல்முறைதான் உபாயங்கள் என்றும் இந்த வித்தியாசங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

தேவனிடமிருந்து பாவமன்னிப்பையும், கிருபையையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அதற்கான ஆதாரம் எப்போதுமே கிறிஸ்து கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழ்ந்து, சிலுவையில் தம்மை பலியாகச் செலுத்தி மரித்ததன் மூலம் சம்பாதித்த அவருடைய தகுதியே. இதனை நாம் மத்தேயு 26:28, கொலோசெயர் 1:13-14, மற்றும் 1 யோவான் 2:12 போன்ற வேதப்பகுதிகளில் பார்க்கிறோம். மன்னிப்பு என்பது எப்போதுமே சம்பாதிக்கப்படுகிறது. ஆனால், அது நம்மால் அல்ல, கிறிஸ்துவால் சம்பாதிக்கப்பட்டது. எல்லாக் கிருபைகளும் நம் வாழ்வில் செயல்படுவதற்கான அடிப்படை வழி விசுவாசம் ஆகும். தேவனிடம் நேரடியாகவோ, அல்லது கிருபையின் உபாயங்கள் மூலமாகவோ வெளிப்படுத்தப்படும் விசுவாசமே தேவனின் கிருபையையும், மற்ற ஆசீர்வாதங்களையும் நம்முடைய வாழ்வில் செயல்படுத்துவதற்கான முதன்மை கருவியாக இருக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விசுவாசம் கிரியை செய்யும் பல வழிகளைப் பற்றி வேதம் குறிப்பிடுகிறது. இந்தப் பாடத்திற்காக, இவ்வழிகளை நாம் இரு வகைகளாகப் பிரிக்கலாம், முதலாவது வழி ஜெபம்.

வேதம் முழுவதிலும், தேவனிடத்தில் கிருபையையும் பாவமன்னிப்பையும் வேண்டிக் கொள்வதற்கான சாதாரண வழியாகக் கொடுக்கப்பட்டிருப்பது ஜெபம் ஆகும். உதாரணமாக, அறிக்கையிட்டு மனந்திரும்பி ஜெபிக்கும் ஜெபங்களை பரிசுத்த ஆவியானவர் நம்மில் பாவமன்னிப்பை செயல்படுத்துவதற்கான விசுவாசத்தின் வெளிப்பாடாக வேதாகமம் பொதுவாகக் குறிப்பிடுகிறது. இத்தகைய ஜெபங்களின் பயன்தன்மையை 1 இராஜாக்கள் 8:29-40, சங்கீதம் 32:1-11, அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:22, 1 யோவான் 1:9 மற்றும் பல பகுதிகளில் காணலாம்.

புதிதாக கர்த்தரை அறிந்திருக்கிறவர்கள் அறிக்கையிட்டு மனந்திரும்பி ஜெபிக்கும் உண்மையுள்ள ஜெபங்கள் பரிசுத்த ஆவியானவர் தொடக்கத்தில் அவர்களுடைய வாழ்வில் பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் கொடுக்கிற வழியாக உள்ளன. இதனால்தான் அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:18 இல், மாற்றமடைவதை சபை “ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல்” என்று குறிப்பிடுகிறது. மேலும், அறிக்கையிட்டு மனந்திரும்புகிறதான ஜெபம் எல்லா விசுவாசிகளுடைய வாழ்க்கையிலும் தொடர்ந்து தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கான வழியாக உள்ளது. 1 யோவான் 1:9 இதை இவ்வாறு குறிப்பிடுகிறது:

> நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9).

கிறிஸ்து நமக்காக செய்து முடித்த காரியங்களின் அடிப்படையில் தேவன் நம்முடைய பாவங்களை இலவசமாக மன்னிக்கிறார் என்பதே சுவிசேஷத்தின் அற்புதமான செய்தியாகும். மேலும் விசுவாசத்துடன் அந்த பாவமன்னிப்பை கேட்பதின் மூலம் நாம் அதனை பெற்றுக்கொள்ளலாம்.

> உங்களுக்கு தெரியுமா, பாவிகள் தம்மிடத்தில் வந்து “பரலோகத்தின் பிதாவே, என்னை மன்னியும்” என்று கேட்பதின் மூலம் பாவிகளை தேவன் மன்னிக்கின்றார் என்று நீங்கள் போதிக்கும் போது அது தேவனுடைய கிருபையை மலிவானதாக மாற்றி விடுகின்றது என்று அநேகர் நினைக்கின்றனர். ஆனால் காரியத்தின் உண்மை என்னவெனில், அது தேவனுடைய கிருபையை உயர்த்துகிறது, ஏனெனில் நம்முடைய மனந்திரும்புதல் இரட்சிப்புக்கும், தேவன் நம்மை மன்னிப்பதற்கு அடிப்படையாக இருப்பதில்லை, ஆனால் தம்முடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரேபேரான குமாரனுடைய விலையேறப்பெற்ற மற்றும் எல்லையற்ற அளவிற்கு மதிப்புடையதாக இருக்கும் மரணத்தினால் தேவன் தாமே நம்முடைய பாவமன்னிப்புக்கும் ஒப்புரவாகுதலுக்கும் அடிப்படையை வழங்கியுள்ளார்.

Dr. ஜே. லிகோன் டங்கன் III

பாவத்தின் நித்திய கடனை ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவத்தின் தண்டனையை செலுத்தி தீர்ப்பதற்கு திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய, தேவனுடைய குமாரன், இயேசு கிறிஸ்து, இந்த உலகத்திற்கு வந்து முப்பத்துமூன்று வருடங்கள் தாழ்மையான அடிமையின் ரூபமெடுத்து பின்பு அடிக்கப்பட்டு கல்வாரி சிலுவையில் மரித்தார். அது நித்தியமான விலையாகவும் அளவுகடந்த விலையாகவும் மற்றும் நம்முடைய பாவத்திற்கான எல்லையற்ற விலையாகவும் இருக்கிறது. ஆகையால் இது மலிவான கிருபை அல்லவே அல்ல. இது எல்லா கிருபைகளிலும் விலையேறப்பெற்ற கிருபையாகும். இயேசு அவருடைய எல்லாவற்றையும் நமக்கு தந்தபடியால், இதை நாம் இலவச ஈவாக பெற்றுக் கொள்கிறோம்.

Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

அவரிடத்தில் வந்து “ஆண்டவரே, என்னை மன்னியும்” என்று கூறுகின்ற யாவரும் மன்னிக்கப்படுகின்றனர். அவர்களுடைய பாவமன்னிப்புக்கான வேண்டுதல் அருமையாக இருந்ததினால் அல்ல, அவர்களுடைய மனந்திரும்புதல் நன்றாக இருந்ததினால் அல்ல, ஆனால் பரலோகத்தின் பிதாவோடு மறுபடியும் இணைக்கப்படுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் இயேசு செய்து முடித்தார் என்பதினாலேயே.

Dr. ஜே. லிகோன் டங்கன் III

பாவமன்னிப்பின் சாதாரண மூலங்களாக செயல்படும், மனந்திரும்புதல், அறிக்கையின் ஜெபங்கள் ஆகியவற்றோடு, பரிந்து பேசும் ஜெபங்கள் சிலவேளைகளில் அசாதாரண அல்லது தனித்துவமான பாவமன்னிப்பிற்கான மூலங்களாக இருக்கின்றன என்பதை இப்பொழுது நாம் குறிப்பிட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிந்து பேசுதல் பின்வருமாறு வரையறுக்கப்படலாம்: மத்தியஸ்தம்; அல்லது மற்றவர்களுக்காக செய்யப்படும் ஜெபம் அல்லது விண்ணப்பம்.

ஜனங்கள் செய்த பயனுள்ள பரிந்து பேசும் ஜெபங்களின் வேதாகம உதாரணங்களை வேதாகமம் பதிவு செய்துள்ளது. இதை எண்ணாகமம் 14:19-20 இல் நாம் பார்க்கிறோம், அங்கே மோசேயின் பரிந்து பேசும் ஜெபத்தால் கர்த்தர் இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்தார். இதை 2 நாளாகமம் 30:18-20 இல் நாம் காணலாம், பஸ்காவுக்கு சரியாக தயாராகாத மக்களை எசேக்கியாவின் பரிந்து பேசும் ஜெபத்தினால் கர்த்தர் அங்கே மன்னித்தார். யோபு 1:5 இல் நாம் இதை காணலாம், யோபு தன்னுடைய பிள்ளைகளுக்காக தொடர்ச்சியாக பரிந்து பேசும் பலிகளை செலுத்துகிறார். யாக்கோபு 5:14-15 இல், பாவம் செய்தவர்களுக்கு பாவமன்னிப்பை மூப்பர்கள் தங்களுடைய ஜெபத்தினால் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாக்கோபு போதிக்கிறார். தேவன் எல்லா வேளைகளிலும் நீதிமான்களின் பரிந்து பேசும் ஜெபத்தின் மூலமாக பாவமன்னிப்பை அளிப்பதில்லை. ஆனால் அநேக வேளைகளில் அப்படி செய்கிறார்.

இப்படிப்பட்ட மனித பரிந்து பேசுதலுக்கு மேற்பட்டு, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய இருவரும் ஜனங்களுக்காக பரிந்து பேசுகின்றனர். இயேசு செய்கின்ற பரிந்து பேசுதல் பற்றி ஏசாயா 53:12, ரோமர் 8:34, மற்றும் எபிரெயர் 7:25 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆவியின் பரிந்து பேசுதல் ரோமர் 8:26-27 இல் போதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது பொதுவான பாவமன்னிப்பின் உபாயங்கள் சபைச் சடங்குகளாகும், அல்லது அநேக புராட்டஸ்டண்டு சபைகள் கூறும் “சபைக் கட்டளைகளான” ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய போஜனம் போன்றவைகளாகும்.

இப்போதும் சடங்குகள் என்ற வார்த்தையை நாம் உபயோகிக்கும்போது ரோம கத்தோலிக்கர்கள் கூறுவதுபோல கர்த்தருடைய போஜனம் மற்றும் ஞானஸ்நானத்தை பற்றிய கண்ணோட்டத்தை நாம் பேசுவதில்லை என்பதில் நாம் தெளிவாக இருத்தல் வேண்டும். மாறாக வரலாற்றில் அநேக புராட்டஸ்டன்ட் ஸ்தாபனங்கள் ”சபைச் சடங்குகள்” என்ற வார்த்தையை கர்த்தருடைய போஜனம் மற்றும் ஞானஸ்நானத்திற்கு பயன்படுத்தியுள்ளனர். இந்த சடங்கு ஆச்சாரங்கள் விசேஷமானதும், ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளவும் நம்முடைய விசுவாசத்தை தெரிவிப்பதற்கும் தேவனால் சபைக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த கட்டளைகளாகும். இந்த கட்டளைகளின் செயல்பாட்டை பற்றி புராட்டஸ்டண்டு பாரம்பரியத்தில் வித்தியாசங்கள் இருகின்றன. ஆனால் அவர்கள் எல்லாரும் ஒருவகையில் இந்த கட்டளைகள் விசேஷமானது என்பதில் ஒத்துப் போகின்றனர்.

*கர்த்தருடைய* பந்தியும் ஞானஸ்நானமும் பாவமன்னிப்பை அருளுகின்ற காரியங்கள் என்று சிலர் பேசுவதை கேட்டு சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் சந்தேகத்துக்கு உள்ளாகின்றனர். எனவே இந்தக் கட்டளைகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தங்களில் பெலன் உள்ளவைகள் அல்ல என்பது வலியுறுத்த படவேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அவைகள் பாவமன்னிப்பிற்கான அடிப்படைகள் அல்ல.

அதேவேளையில் கர்த்தருடைய போஜனம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் நமது விசுவாசத்தை வெளிக்கொணரும் போது பரிசுத்த ஆவியானவர் இந்த சடங்குகளின் மூலமாக நம்முடைய வாழ்க்கையில் பாவமன்னிப்பை அளிக்கிறார் என்று வேதாகமம் போதிக்கின்றது.

மாற்கு 1:4, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38, ரோமர் 6:1-7, மற்றும் கொலோசெயர் 2:12-14 ஆகிய வசனங்களில் ஞானஸ்நானம் கிருபையை அளிக்கும் ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஒரு உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16 இல் பவுலுக்கு உரைக்கப்பட்ட அனனியாவின் வார்த்தைகளை கவனியுங்கள்:

> இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16)

இந்த அறிவுரைகளில், ஞானஸ்நானத்தின் மூலமாக பவுலினுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் அல்லது “கழுவப்படும்” என்று அனனியா குறிப்பிடுகிறார்.

நிச்சயமாக, ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கு கட்டாயமான ஒரு காரியம் அல்ல. மற்ற வழிகளில் கூட நாம் மன்னிக்கப்பட முடியும். உதாரணமாக, இயேசுவோடு சிலுவையில் அடிக்கப்பட்டு இருந்தபோது விசுவாசம் வைத்த கள்ளன் ஒரு போதும் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. இருந்தபோதிலும், லூக்கா 23:43 அவன் மன்னிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டான் என்று குறிப்பிடுகிறது. ஆகவே ஞானஸ்நானம் எடுப்பவர்களுக்கு மாத்திரமே பாவமன்னிப்பும் இரட்சிப்பும் கிடைக்கும் என்று சிந்திக்கும் தவறை நாம் செய்யக்கூடாது. இருப்பினும் ஞானஸ்நானம் பாவமன்னிப்பை நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வருகிறது என்று வேதம் போதுமான அளவு தெளிவுபடுத்துகிறது.

இது கர்த்தருடைய போஜனத்துக்கும் பொருந்தும். கர்த்தருடைய போஜனத்தில் பங்கு பெறுதல் கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக கிடைக்கும் பலன்களாகிய பாவமன்னிப்பு போன்ற காரியங்களை பெற்றுக்கொள்ள வழிவகுக்கிறது என்று பவுல் வெளிப்படையாக போதிக்கிறார். 1 கொரிந்தியர் 10:16 இல் அவர் எழுதியதை கவனியுங்கள்:

> நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய ரத்தத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய

> சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா? (1 கொரிந்தியர் 10:16)

இவைகள் தன்னில் தானே பதிலை கொண்டுள்ள கேள்விகள். பவுலினுடைய நிருபத்தை படிக்கிற யாவரும் இதற்கு பதில் “ஆம், நிச்சயமாக” என்பதுதான் என்று அறிந்திருந்தனர். கர்த்தருடைய போஜனத்தில் பங்கு கொள்வதன் மூலம், நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியமாகிவிட்டோம்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ச்சியாக நாம் அனுபவிக்கக் கூடிய மிக உன்னதமான இரட்சிப்பின் ஆசீர்வாதம் பாவமன்னிப்பாகும். நாம் புதியதாக மனந்திரும்பி இருக்கலாம் அல்லது வெகுநாட்களாகவே விசுவாசிகளாக இருக்கலாம், பாவமன்னிப்பு என்பது கிறிஸ்துவோடு நடக்கும் பாதையில் தொடர்ச்சியாக இருக்கக்கூடிய அம்சமாகும். இது அநேக ஆசீர்வாதங்களுக்கு கொண்டு சேர்க்கவும் செய்கின்றது.

1703 - 1791 வரை வாழ்ந்த மெத்தடிஸ்ட் சபையின் ஸ்தாபகர் ஜான் வெஸ்லி, தன்னுடைய *26 ஆம் பிரசங்கத்தில்* பாவ மன்னிப்பைப் பற்றி பேசினார், அதில் அவர் மலைப் பிரசங்கத்திலிருந்து செய்தியை பிரசங்கித்தார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.

> நாம் பாவ மன்னிப்பை பெற்றுக் கொண்ட உடனேயே … அவர் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் பரிசுத்தம் ஆக்கப்பட்டவர்கள் பெற்றுக் கொண்டதைப் போல அநேக காரியங்களை பெற்றுக் கொள்கிறோம். பாவம் தன்னுடைய வல்லமையை இழந்து விட்டது: தேவனிடம் கிருபை பெற்று, கிருபைக்கு கீழ் இருப்பவர்கள் மீது அதற்கு அதிகாரம் இல்லை. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இருப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இல்லை, ஆகவே அவர்கள் பாவத்திலிருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும் விடுதலை ஆக்கப்பட்டுள்ளனர். நியாயப்பிரமாணத்தின் நீதி அவர்களுக்குள் நிறைவேற்றப்பட்டுவிட்டது, அவர்கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறார்கள்.

> கிறிஸ்தவர்களைக் குறித்த மிக அருமையான உண்மை பாவம் மன்னிக்கப்பட்டதேயாகும் என்று நான் நினைக்கிறேன். சிருஷ்டிகரோடு, தேவனோடு சரியான உறவில் இருப்பதே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பதன் அடிப்படையான அர்த்தமாகும். இன்றைய உலகத்தை பார்க்கும்போது, ஜனங்கள் எல்லாவற்றின் அர்த்தம், முக்கியத்துவம், நோக்கம் ஆகியவற்றை அறிந்துகொள்ள வெகுவாக முற்படுகின்றனர். நம்முடைய கலாச்சாரத்தில் அநேக குளறுபடிகள் இருக்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வாழ்க்கை என்பது என்ன? வாழ்வதின் நோக்கம் என்ன? நான் எதற்காக இங்கு இருக்கின்றேன்? அர்த்தம் மற்றும் முக்கியத்துவத்தை கண்டுகொள்ள எல்லா காரியத்தையும் ஜனங்கள் முயற்சி செய்கின்றனர் – உத்தியோகம் அல்லது காமம் அல்லது போதை ஆகியவற்றை பின்தொடர்கின்றனர். அதாவது நான் சொன்னதின் அர்த்தம் என்னவெனில் ஜனங்கள் சந்தோஷத்தையும் இன்பத்தையும் கண்டறிவதற்கு அனைத்து இடங்களையும் வழிகளையும் முயற்சி செய்கின்றனர். ஆனால் சுவிசேஷம் நமக்கு சொல்வது என்னவெனில் மனிதர்களாக நமக்கு மிகவும் அடிப்படையான தேவை நம்மை உண்டாக்கின சிருஷ்டிகரோடு சரியான உறவில் இருப்பதேயாகும். தேவனுடைய கோபாக்கினையை ஏற்றுக்கொள்ளவும், நம்முடைய பாவங்களுக்கு பலியாக தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் என்று சுவிசேஷம் கூறுகிறது. தேவன் தம்முடைய அன்பினால் அவருடைய குமாரனை நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி அனுப்பினார், அதனால் நாம் நம்முடைய நம்பிக்கையை அவர் மீது வைக்கும்போது நாம் பாவமன்னிப்பு அடைகிறோம். நாம் அந்த அனுபவத்திற்கு வரும்போது, அப்படிப்பட்ட பாவமன்னிப்புக்கென்று நாம் இயேசு கிறிஸ்துவிடம் திரும்பும்போது விவரிக்கமுடியாத சமாதானத்தை அடைகிறோம், உலகத்தோடு சரியாக இருக்கின்றோம் ஏனென்றால் அதுவே உலகத்தோடு சரியாக இருப்பதாகும். இதற்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டோம் என்று திடீரென உணர ஆரம்பிக்கிறோம். நாம் தேவனோடு சரியான உறவில் இருக்கவேண்டும் என்பதற்காக சிருஷ்டிக்கபட்டுள்ளோம். அத்தருணத்தில் நாம் அதை உணர்கின்றோம்.
>
> Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

நாம் பாவமன்னிப்பு என்ற கோட்பாட்டைப் பற்றி பார்த்தோம், இப்பொழுது நம்முடைய அடுத்த விசுவாச கோட்பாடான சரீர உயிர்த்தெழுதலைப் பற்றிப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# உயிர்த்தெழுதல்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையிலிருந்து* இந்த வார்த்தைகளை நினைவு கூறலாம்:

> சரீர உயிர்த்தெழுதலை …
>
> நான் விசுவாசிக்கிறேன்.

இந்த விசுவாசப் பிரமாணமானது இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி பேசவில்லை என்பதைக் குறித்து இந்த இடத்தில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இயேசு மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று கூறும்போதே இந்த விசுவாசப் பிரமாணத்தில் முன்னதாகவே இயேசு கிறிஸ்துவின் சொந்த உயிர்த்தெழுதலைப் பற்றிய காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. "சரீர உயிர்த்தெழுதல்" பற்றி இந்த விசுவாசப் பிரமாணம் கூறும்போது அது பொதுவான உயிர்த்தெழுதலைப் பற்றியே பேசுகிறது – அதாவது இது கிறிஸ்து மகிமையில் வரும்போது எல்லா ஜனங்களும் எழுந்திருக்கும் உயிர்த்தெழுதல் ஆகும்.

நாம் யாவரும் பொதுவான சரீர உயிர்த்தெழுதலை மூன்று படிகளாக கருத்தில் கொள்ளலாம். முதலாவது, நம்முடைய சரீர மரணத்தை விளைவித்த சாபத்தைக் குறித்து பார்க்கலாம். இரண்டாவது கிறிஸ்தவ சுவிசேஷம் நம்முடைய சரீரத்திற்கு ஜீவனை தருகின்றது என்று நாம் விளக்கலாம். மேலும் மூன்றாவது நம்முடைய சரீரங்கள் அடையப்போகும் மீட்பை நாம் காணலாம். நம்முடைய சரீர மரணத்திற்கு காரணமான சாபத்திலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.

## சாபம்

முந்தைய பாடங்களில் நாம் கண்டது போல, தேவன் மனுஷரை மாம்ச சரீரம் மற்றும் காணப்படாத ஆத்துமாக்களை உடையவர்களாக படைத்துள்ளார். எபிரெயர் 4:12 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:23 ஆகியவற்றின் அடிப்படையில், சில பாரம்பரியங்கள் மனிதன் ஆத்துமாவோடு ஆவியும் உடையவனாய் இருக்கின்றான் என்று கூறுகின்றன. ஆனால் தோராயமாக 200 வசனங்கள் இந்த இரண்டில் ஒன்றைப் பற்றி பேசுகின்றன. இவை இரண்டும் உள்ளான, காணக்கூடாத மனிதனின் பகுதி முழுவதையும் குறிப்பிடுவதாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அதிகமான கிறிஸ்தவ பாரம்பரியங்கள் " ஆத்துமா" மற்றும் "ஆவி" இவை இரண்டும் ஒரே காரியத்தை குறிப்பிடுகின்றன என்று முடிவு செய்துள்ளன, மேலும் மனிதன் சரீரம் மற்றும் ஆத்துமா என்கிற இரண்டு பகுதிகளை கொண்டவனாக இருக்கின்றான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் பாவத்தில் வீழ்வதற்கு முன்பாக, நம்முடைய சரீரங்கள், மற்றும் நமது ஆத்துமாக்கள் பாவம் மற்றும் அதன் தீங்கான வல்லமைகளால் பாதிக்கப்படாததாகவே இருந்தன. ஆனால் ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்தபோது, பாவம் அவர்களின் ஆத்துமாவை மட்டுமல்ல, அவர்களின் சரீரத்தையும் சிதைத்தது. இந்த சரீரத்தின் அழிவானது இறுதியில் சரீர மரணத்தில் முடிந்தது. ஆதியாகமம் 3:19 இல் ஆதாமுக்கு தேவன் கொடுத்த சாபத்தை கவனியுங்கள்:

> நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார் (ஆதியாகமம் 3:19).

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தபோது, அவர்கள் இருவரையும் அவர் சபித்தார். அவர்கள் அழிவுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது அந்த சாபத்தின் ஒரு பகுதியாகும். அவர்கள் இறுதியில் மரித்து மண்ணுக்கு திரும்புவார்கள். மேலும் எல்லா மனிதர்களும் ஆதாம் மற்றும் ஏவாளிடமிருந்து தோன்றியமையால், நாமெல்லாரும் அதே விதமான அழிவை உடையவர்களாக பிறந்திருக்கிறோம். பவுல் ரோமர் 5:12 இல் எழுதியது போல:

> இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று (ரோமர் 5:12)

ஆவிக்குரிய மற்றும் சரீர ரீதியில் பாவம் ஆதாமையும் ஏவாளையும் பாதித்தது. மேலும் நாம் அவர்களது சந்ததியினராய் இருப்பதால், நாம் அதே சாபத்தை சுமக்கிறோம். வேதாகமம் விளக்குகிற படி ஆவிக்குரிய மரணத்தோடு நம்முடைய ஆத்துமா இந்த பூமிக்கு வந்திருக்கின்றது. நாம் தேவனுடைய கோபாக்கினைக்கு கீழ் இருக்கின்றோம், மேலும் அவரை பிரியப்படுத்தும் எந்தவித திராணியையும் இழந்துவிட்டோம். இதை நாம் ரோமர் 5:12-19 மற்றும் 8:1-8 ஆகிய பகுதிகளில் வாசிக்கலாம்.

மேலும் ஆதாம் மற்றும் ஏவாளை போலவே, நம்முடைய சரீரங்கள் பாவத்தால் கறைப்பட்டுள்ளன. இந்தப் பாவத்தின் தீங்கினால் சரீரப் பிரகாரமான கடினம், நோய், மற்றும் இறுதியில் மரணம் ஆகியவை சம்பவிக்கிறன. பவுல் இதைப்பற்றி ரோமர் 6:12-19, மற்றும் 7:4-25 ஆகிய வசனங்களில் பேசுகிறார். நம்முடைய சரீரம் மற்றும் ஆத்துமா முழுமையையும் பாவமானது பாதித்துள்ளது. ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு நம்முடைய ஆத்துமாக்களையும் சரீரங்களையும் மீட்கின்றது என்பது தேவனுடைய அருமையான வாக்குத்தத்தம் ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மனிதனுடைய மரணத்தை கிறிஸ்தவர்கள் ஏதோ சாதாரணமான ஒன்றாக பார்க்கக் கூடாது. நாம் அநேக வேளைகளில் இப்படிப்பட்ட சிந்தனையை நம்முடைய பேச்சில் உபயோகிக்கவும் பகிரவும் செய்கின்றோம். "மிக நீண்ட காலம் நல்ல வாழ்க்கை வாழ்ந்தார்" என்று சிலரைப் பற்றி நாம் அடக்க ஆராதனைகளில் கூறுவோம். மேலும் சிறு பிள்ளையின் மரணம் அல்லது ஒரு நபர் தனது இருபதுகளில் அல்லது முப்பதுகளில் மரித்தால் நான் "ஒ இது கொடுமை" என்று கூறுவோம். இல்லை, இது நிச்சயமாகவே மரணத்தைக் குறித்த சரியான கிறிஸ்தவ பார்வை அல்ல. எல்லா மரணமும் அசாதாரணமானது என்பதே கிறிஸ்தவனின் பார்வையாகும். நாம் ஆரம்பத்தில் இருந்தே என்றென்றைக்கும் நீடித்து வாழ்வதற்கே உருவாக்கப்பட்டோம். எப்படி சிருஷ்டிப்பின் காரியத்தில் கூட ஏழாம் நாளில் தேவன் ஒய்ந்திருந்தார் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் . அவர் தமது சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும் முழுவதுமாக மகிழ்ந்திருந்தார். நாம் பின்பு அவருடைய மகிமைக்காக வாழ்ந்து மேலும் அவருடைய சிருஷ்டிப்பின் கட்டளைகளை நிறைவேற்றியிருப்போம். நாம் மரிப்பதற்காக ஒரு போதும் உருவாக்கப்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக, ஆதியாகமம் 3 இல் பாவத்தின் சம்பளத்தைப் பெற இந்த உலகத்தில் பாவம் பிரவேசித்தது, அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் பாவத்தின் சம்பளமும் மற்றும் ஆதியாகமம் 2 இல் பேசப்பட்டதுமாகிய பாவத்தின் சம்பளம் மரணம் ஆகும். மரணம் சரீரப் பிரகாரமானது; மரணம் ஆவிக்குரிய பிரகாரமானதும் கூட.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

ஒருவகையில், சரீர மரணம் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமே ஏனெனில் நாம் நேரடியாக கிறிஸ்துவின் பிரசன்னத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறோம். ஆனால் மிகவும் அடிப்படையான வகையில், சரீர மரணமானது சோகமானதே. இது பொதுவாக எல்லாருக்குமான மனித அனுபவம், ஆனாலும் பயங்கரமாக இயற்கைக்கு மாறானது. தேவன் மனுக்குலத்தை மரணத்துக்கு என்று உருவாக்கவில்லை; அவர் நம்மை ஜீவனுக்கு என்று உருவாக்கினார். கிறிஸ்து மறுபடியும் வந்து நம்முடைய சரீரத்தை மீட்கும் வரையில் நம்முடைய இரட்சிப்பு முழுமைபெறாது.

நம்முடைய சரீர மரணத்தை கொண்டுவந்த சாபத்தை பார்த்துவிட்டோம், நம்முடைய உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தும் சுவிசேஷத்தின் அம்சங்களுக்கு நேராக நாம் திரும்பலாம்.

# சுவிசேஷம்

சரீரம் இல்லாத ஆவிகளாக பரலோகத்தில் நித்தியத்தை அவர்கள் கழிக்க போகிறார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களை நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? அநேகருக்கு தெரிந்திருக்கலாம். சில நவீன காலத்து சபைகளுக்கு மரித்தோர் உயிர்த்தெழுதல் என்ற உபதேசம் பெரியதாகவே இருக்கின்றது என்பது, மிகவும் வித்தியாசமான ஒன்றாக தோன்றுகின்றது. மேலும் அதற்கு ஒரு காரணம் கிறிஸ்தவர்கள் நம்முடைய சரீரங்களுக்கான முக்கியத்துவத்தை அறிய தவறியதேயாகும். ஆனால் கிறிஸ்து வரும்போது நம்முடைய ஆத்துமாக்கள் மாத்திரமல்ல, சரீரங்களும் மகிமை அடைய போகின்றது என்ற நற்செய்தியை வேதாகமம் தெளிவாக போதிக்கின்றது.

நாம் மூன்று விஷயங்களை கருத்தில்கொண்டு உயிர்த்தெழுதல் ஆனது சுவிசேஷத்தின் ஒரு பகுதி என்று பார்க்கப் போகின்றோம். முதலாவது இதைப்பற்றிய பழைய ஏற்பாட்டு பின்னணியை நாம் பார்க்கப் போகின்றோம். இரண்டாவது, புதிய ஏற்பாட்டில் அது தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை பார்க்க போகின்றோம். மேலும் மூன்றாவதாக விசுவாசிகளின் உயிர்த்தெழுதலுக்கும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி பேசப் போகின்றோம். பழைய ஏற்பாட்டிலிருந்து தொடங்கலாம்.

## பழைய ஏற்பாடு

சுவிசேஷம் என்ற வார்த்தையின் அர்த்தம் நற்செய்தி ஆகும், அது உண்மையில் பழைய ஏற்பாட்டிலிருந்து வந்தது என்று அநேக தற்கால கிறிஸ்தவர்கள் உணர்வதில்லை. குறிப்பாக இதை ஏசாயா 52:7 மற்றும் 61:1 மற்றும் நாகூம் 1:15 ஆகிய இடங்களில் நம்மால் காண முடியும். ஒரே ஒரு உதாரணமாக, ஏசாயா 52:7 யைக் கவனிக்கவும்:

> சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: ”உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறார்!” என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன (ஏசாயா 52:7).

பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனத்தை அவருடைய எதிரிகள் மற்றும் ஜனங்களுடைய எதிரிகளிடத்திலிருந்து இரட்சிப்பதே “நற்செய்தி” அல்லது “சுவிசேஷம்” என்பதாகும். இன்னும் சுருக்கமாகச் சொன்னால், தேவன் தம்முடைய ஜனங்களை இவ்வுலகத்தின் நெருக்கத்தில் இருந்து விடுவிப்பது நற்செய்தி ஆகும். ஆனால் விரிவாகப் பார்த்தால், நற்செய்தி எனப்படுவது ஆதாம் மற்றும் ஏவாளின் பாவ வீழ்ச்சியினால் உண்டான சாபங்களை தேவன் மாற்றிப் போடுவதே ஆகும். அவர் தம்முடைய பரலோக ராஜ்யத்தை பூமியில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விரிவுபடுத்தி மேலும் அவர்மீது விசுவாசமுள்ள யாவரையும் இறுதியில் ஆசீர்வதிக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுத்த இரட்சிப்பானது இயேசு கிறிஸ்துவின் வருங்கால ஜெயத்தை அடிப்படையாய்க் கொண்டது என்பது உண்மையே. கிறிஸ்து வந்து இன்னும் மரிக்கவில்லை என்றாலும், அவர் ஏற்கனவே தம்முடைய ஜனத்துக்கு மரிக்க வாக்கு கொடுத்திருந்தார். அந்த வாக்குத்தத்தம் பழைய ஏற்பாட்டு மக்களின் இரட்சிப்பை உறுதிசெய்ய போதுமானதாக இருந்தது. உண்மையில், பழைய ஏற்பாட்டில் எல்லாவிதமான இரட்சிப்பின் நம்பிக்கையானது கிறிஸ்துவையும் அவர் செய்து முடிக்கின்ற காரியங்களையும் குறிக்கின்றததாக இருந்தது.

எபிரெயர் 10:1-5 பழைய ஏற்பாட்டு பலிகளை விவரிக்கும் முறையை கவனிக்கவும்:

> நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால்… காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்ய முடியாது. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசித்த போது, அவர் இவ்வாறு சொன்னார்: ”சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.” (எபிரெயர் 10:1-5).

பின்னாளில் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்ட உண்மையின் நிழலே பழைய ஏற்பாட்டின் பலிகள் என்று எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் தெரிவிக்கிறார். மனிதனுடைய பாவம் மனிதனுடைய மரணத்தை கொண்டே தண்டிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. எனவே மிருகங்களின் பலிகள் பாவத்தின் நிவாரணத்தை உண்டாக்கும் பரிபூரண பலியாக இருக்கவில்லை. ஆனால் அவைகள் இயேசுவைக் குறித்தன. அவருடைய பூரணமானதும் போதுமானதும் மற்றும் பலன் மிகுந்ததுமான பாவ நிவாரண பலியை குறிக்கின்றதாக அது இருந்தது.

தேவன் மரித்தோரை எழுப்பி, அவர்களுடைய கிரியைகளுக்கு ஏற்றவாறு நியாயம் தீர்ப்பார். அந்த நாள் வரப்போகின்றது என்பது தேவனுடைய ஜனங்களுக்கு பழைய ஏற்பாட்டின் சுவிசேஷத்தின் ஒரு பகுதியாக போதிக்கப்பட்டது. தேவனிடம் விசுவாசம் வைத்து, நீதியை நடப்பித்தவர்கள், என்றென்றுமாய் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். ஆனால் தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்றவர்கள் வரப்போகும் தண்டனைக்காக நியாயத்தீர்ப்பு அடைந்தனர். இந்த இரண்டு விளைவுகளும் தொடர்ச்சியாக என்றென்றைக்கும் சரீரப்பிரகாரமாகவே அனுபவிக்க கூடியது. கிறிஸ்தவ இறையியல் வல்லுநர்கள் பொதுவாக இதனை கடைசி நியாயத்தீர்ப்பு என்று குறிப்பிடுகின்றனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முந்தைய பாடத்தில் நாம் பார்த்ததுபோல, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* ஒரே வரியில் இறுதி நியாயத்தீர்ப்பை குறிப்பிடுகின்றது:

> அங்கிருந்து அவர் ஜீவனுள்ளவர்களையும்
> மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருவார்.

ஒருவேளை இறுதி நியாயத்தீர்ப்பானது சரீரப் பிரகாரமான உயிர்த்தெழுதலை உள்ளடக்கியது என்பதை பற்றிய தெளிவான வாக்கியம் தானியேல் 12 இல் காணப்படலாம், அங்கே தானியேலுக்கு, தேவன் தம்முடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து எதிர்காலத்தில் விடுவிப்பார் என்று தேவதூதனால் வெளிப்படுத்தப்பட்டது.

தானியேல் 12:1-2 வசனங்களில் தானியேல் கூறியதை கவனியுங்கள்:

> அக்காலத்திலே – புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக்
> காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் –
> விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே
> நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர்
> நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும்
> விழித்து எழுந்திருப்பார்கள் (தானியேல் 12:1-2)

பூமியின் தூளிலே நித்திரையில் இருப்பவர்களை பற்றி பேசும்போது பிரத்தியேகமாக தானியேல் சரீரப் பிரகாரமான உயிர்த்தெழுதலை குறிப்பிடுகிறார். ஆத்துமாக்கள் பூமியின் தூசியில் தூங்குவதில்லை; சரீரமே தூசியில் தூங்குகிறது. மேலும் இந்த சரீரங்களே இறுதி நியாயத்தீர்ப்பில் எழுந்திருக்கும்.

பொதுவான உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய நியாயத் தீர்ப்பு நாளை பற்றி ஏசாயாவும் உரைத்துள்ளார்.

ஏசாயா 26:19-21 வசனங்களில் ஏசாயா எழுதியிருப்பதை கவனியுங்கள்:

> மரித்த உம்முடையவர்கள் பிரேதமான
> என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்.
> மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக்
> கெம்பீரியுங்கள்… மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்…
> இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம்
> அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய
> ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார் (ஏசாயா 26:19-21).

ஒரு விசை கூட, மரித்தவர்கள், சாம்பலில் வாசம் பண்ணுகிறவர்கள், அவர்களுடைய கல்லறைகளை விட்டு புது ஜீவன் உடையவர்களாக, பூமி அவர்களை பெற்றெடுப்பது போல எழுந்திருப்பார்கள் என்று நாம் பார்க்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இது ஆண்டவர் இப்பூமியில் உள்ளவர்களின் பாவங்களுக்கு ஏற்ற தண்டனையை கொடுக்க வரும், நியாயத்தீர்ப்பின் சூழலில் நடைபெறும்.

இறுதி நியாயத்தீர்ப்பு மற்றும் பலன் கொடுக்கப்படுவதற்காக பாதாளத்திலிருந்து விடுதலை ஆக்கப்படுவதை பற்றி பேசும் அநேக பழைய ஏற்பாட்டு வேதப் பகுதிகளில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற உபதேசம் கொடுக்கப்பட்டுள்ளது, அவையாவன சங்கீதம் 49:7-15, மற்றும் சங்கீதம் 73:24-28. மேலும் யோபு 19:25-27 வசனங்களில், யோபு உறுதியாக அவர் உயிர்த்தெழுந்து நியாயத் தீர்ப்பின் நாளாகிய கர்த்தருடைய நாளில் பூமியில் நின்று தேவனை காண்பார் என்று தம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

> புதிய ஏற்பாட்டை போல பழைய ஏற்பாட்டில் வருங்கால உயிர்த்தெழுதல் மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றி தெளிவான போதனை இல்லை. ஆனால் அப்படி நடைபெறும் என்பதற்கான குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன என்பது உண்மை. உதாரணமாக ஏசாயா மரித்தோர் தங்களுடைய கல்லறையை விட்டு எழும்பி ஜீவித்து இருப்பார்கள் என்று உரைக்கிறார். தானியேல் அதைப்போலவே மரித்தோர் எழுந்திருப்பார்கள், நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் இறுதியான நியாயத்தீர்ப்புக்கு எழுந்திருப்பார்கள் என்று கூறுகிறார். இந்த நம்பிக்கையானது எல்லா யூத ஜனங்களிடத்திலும் இல்லை என்றாலும் ஒரு சில யூதர்களிடத்தில் இருந்தது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்கள் உயிர்த்தெழுதலை நம்பினார்கள். சதுசேயர் நம்பவில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது பைத்தியக்காரத்தனமான ஒன்றாக காணப்படவேண்டும் என்பதற்காக இயேசுவினிடத்தில் சதுசேயர்கள் தந்திரமாக கேள்வி கேட்கிறார்கள், இயேசு அவர்களுக்கு வேத பகுதியை மேற்கோள் காட்டுகிறார்: “நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கின்றேன்.” இந்த வசனத்தை இயேசு சொல்லி “தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கே தேவனாய் இருக்கிறார்” என்று கூறினார். ஆகவே ஆபிரகாம் ஜீவன் உள்ளவராக இருக்கின்றார், ஒருவரோடு தேவன் உடன்படிக்கை உறவை ஏற்படுத்தும் போது, உண்மையில் அது தனிப்பட்ட நபரோடு அவர் ஏற்படுத்தும் தனிப்பட்ட உறவாகும், மேலும் ஆபிரகாம் பூமியின் தூளில் நித்திரையாக இருப்பான் என்று சொன்னால் தேவன் ஆபிரகாமோடு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்று சொல்வது அர்த்தம் அற்றதாய் இருக்கும். ஆகவே புதிய ஏற்பாடு எந்தவொரு சமரசமும் இன்றி உயிர்த்தெழுதல் என்ற உபதேசத்தை போதிக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் உண்மையில், இயேசுவின் உயிர்த்தெழுதல் அதற்கு இறுதியான முத்திரையை தருகிறது.

Dr. ஜான் எம். ஃபிரேம்

பழைய ஏற்பாட்டு சுவிசேஷத்தில் பொதுவான உயிர்த்தெழுதல் ஒரு பகுதியாக இருந்தது என்பதை பார்த்தோம், அது புதிய ஏற்பாட்டில் உள்ள சுவிசேஷ செய்தியின் ஒரு பகுதியாகவும் இருக்கின்றது என்பதையும் நாம் பார்க்கலாம்.

## புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில், இறுதியாக மீட்பர் வந்துவிட்டார் என்பதே, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டு சுவிசேஷ உரைத்தலின் மிகப்பெரிய வித்தியாசமாகும். அவர் வரலாற்றில் நசரேயனாகிய இயேசுவாக வெளிப்பட்டுவிட்டார். தேவன் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் ஆளுகிறார். இதனால்தான் புதிய ஏற்பாடு அநேக நிலைகளில் இயேசுவை கர்த்தர் என்று வலியுறுத்துகிறது, அதன் அர்த்தம் அவர் ஆளுகை செய்யும் ராஜா என்பதாகும். இதனை லூக்கா 2:11, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:36, ரோமர் 10:9, மற்றும் 1 கொரிந்தியர் 12:3 ஆகிய பகுதிகளில் நாம் காணலாம்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாகவே, பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் ஒரே விதத்தில் இரட்சிப்பு வருகிறது. பழைய ஏற்பாட்டு விசுவாசத்திற்கும் புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசம் தேவன் பேரில் உள்ள விசுவாசத்தை பற்றியதாக அல்லாமல் பிரத்தியேகமாக கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தை குறிப்பதாய் இருக்கின்றது. பழைய ஏற்பாட்டின் விசுவாசம் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற எதிர்நோக்கி காத்திருப்பதையே அடிப்படையாக கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் விசுவாசம் பின்னோக்கி பார்த்து அந்த வாக்குத்தத்தம் நிறைவேறி இருப்பதை கல்வாரியில் காணும் காரியத்தையே குறிக்கின்றது. ஆகவே அவை இரண்டும் நாம் கொடுக்கக் கூடிய காரியங்களை பற்றியதாய் அல்லாமல் தேவன் கொடுக்கும் காரியத்தின் மீதுள்ள விசுவாசத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டு இரட்சிப்பின் வாக்குத்தத்தங்கள் யாவும் கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எபிரெயர் 10:1-5 இல் நாம் பார்க்கும்போது, அவரது மரணத்தையே பழைய ஏற்பாட்டு பலிகள் குறிப்பிட்டன. மேலும் ரோமர் 15:8-13, மற்றும் கலாத்தியர் 3:16 ஆகிய வசனங்களில் இயேசுவின் சுவிசேஷம் பழைய ஏற்பாட்டு பிதாக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியது என்று பவுல் போதிக்கிறார். மேலும் அனைத்து வழிகளிலும் புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டு சுவிசேஷத்தை உறுதிப்படுத்துகிறது – இந்த நற்செய்தி என்னவெனில் தெய்வீக ராஜா இறுதியில் தமது ஜனங்களுக்கு கிருபையின் மூலமாக விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை கொடுக்க கடந்து வந்தார் என்பதே.

பொதுவான உயிர்த்தெழுதல் இறுதியான நியாயத்தீர்ப்பில் நடைபெறும் என்று இயேசு போதித்தார். உதாரணமாக மத்தேயு 22:23-32 மற்றும் லூக்கா 20:27-38 இல் சதுசேயர் பொதுவான உயிர்த்தெழுதலை மறுதலிப்பதை மறுக்கிறார். லூக்கா 14:13-14 வசனங்களில் விசுவாசிகள் உயிர்த்தெழுதலில் பலனை பெறும்படி நற்கிரியைகளை செய்ய வேண்டும் என்று இயேசு உற்சாகப்படுத்துகிறார். மேலும் யோவான் 11:24-26 இல் லாசருவின் சகோதரியாகிய மார்த்தாளோடு அவர் பேசியபோது இதை உறுதிப்படுத்துகிறார். லூக்கா 20:37 இல் இயேசு சொன்னதை கவனியுங்கள்:

> மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார் (லூக்கா 20:37).

இங்கே இயேசு பொதுவான உயிர்த்தெழுதல் என்ற கோட்பாடு ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிடுகின்றார். மேலும் இதே காரியம் புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளில் எல்லாம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக, அநேக சபைகளில், மரித்தோர் உயிர்த்தெழுதல் பற்றிய உபதேசம் அதிகமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. அநேக கிறிஸ்தவர்கள் அவர்கள் நித்திய காலமாக சரீரம் இல்லாத ஆவிகளாக இருப்பார்கள் என்று நம்புகிறார்கள். ஆனால் எபிரெயர் 6:1-2 இல் மரித்தோரின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான சத்தியங்களில் ஒன்றாக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் எபிரேயர் 11:35 இல் விசுவாசிகளின் உயிர்த்தெழுதல் நற்கிரியைகளை செய்வதற்கு ஒரு உந்துகோலாக கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையாகவே, கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு உயிர்த்தெழுதலை பற்றிய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தார்கள் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர். உதாரணமாக, பேதுரு மற்றும் யோவான் அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:1-2 இல் இதை செய்தனர். அப்போஸ்தலர் 23:6-8 மற்றும் 24:14-21 ஆகிய வசனங்களில் பவுல் அதை செய்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு உதாரணமாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 24:14-15 இல் உள்ள வசனங்களில் பவுல் எவ்வாறு தம்முடைய ஊழியத்தை தற்காத்தார் என்பதை கவனியுங்கள்:

> இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனைசெய்து நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து, நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 24:14-15).

இங்கே, பவுல் இறுதி நியாயத்தீர்ப்பு நடைபெறும் பொதுவான உயிர்த்தெழுதலில் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை எப்படியோ அப்படியே யூதர்களுடைய நம்பிக்கையும் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டினார். வித்தியாசம் என்னவெனில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மூலமாக உயிர்த்தெழுதல் நிறைவேற்றப்படும் என்று விசுவாசித்தனர்.

இரட்சிப்பைப் பற்றிய தேவனுடைய திட்டம் எப்பொழுதும் ஒரே மாதிரி தான் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். நாம் ஒரு வழியில் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் பழைய ஏற்பாட்டில் யூதர்கள் வேறு வழியாக இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் தேவன் திட்டம் வைத்திருக்கவில்லை. யூதர்களுக்கு ஒருவழியாக இரட்சிப்பையும் புறஜாதியாருக்கு வேறு வழியாக இரட்சிப்பையும் அவர் வைக்கவில்லை. பழைய மற்றும் புதிய ஏற்பாடு அவர்களின் போதனைகளில் இணைந்துள்ளன. அவர்கள் பழைய ஏற்பாட்டை தங்களுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய வார்த்தையாக பொக்கிஷப்படுத்தியிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். தேவனுடைய ஜனங்கள் எப்பொழுதும் கிருபையினாலே, விசுவாசத்தின் மூலமாக மற்றும் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டு உள்ளனர். உண்மையுள்ள ஜனங்களுக்கு தேவன் எப்போதும் அருளுகின்ற இரக்கம் மற்றும் மீட்பின் நீண்ட வரலாற்றில் கிறிஸ்தவர்கள் ஒரு பங்கு வகிக்கின்றனர். முழு வேதாகமமும் – இரண்டு ஏற்பாடுகளும் – இந்த அற்புதமான சத்தியத்தை நமக்கு போதிக்கின்றன.

இப்பொழுதும் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள சுவிசேஷம் மரித்தோர் உயிர்த்தெழுதல் எனப்படும் நல்ல செய்தியை உள்ளடக்கியுள்ளது என்பதை பார்த்தோம், விசுவாசிகளின் உயிர்த்தெழுதல் மற்றும் இயேசுவின் உயிர்த்தெழுதல் இரண்டுக்கும் இடையில் உள்ள சம்பந்தம் என்ன என்பதை நாம் பார்க்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இயேசுவின் உயிர்த்தெழுதல்

குறைந்தபட்சம் இரண்டு முக்கிய தொடர்புகள் இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் விசுவாசிகளின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்கு இடையில் இருப்பதை புதிய ஏற்பாடு போதிக்கிறது. முதலாவது, நாம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு இணைக்கப்பட்டு இருக்கிறபடியால் பாக்கியமான வாழ்க்கைக்கு எழுந்திருப்போம். ரோமர் 6:4-5 இல் பவுல் எழுதியது போல:

> பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட … அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:4-5).

விசுவாசத்தின் மூலம், ஞானஸ்நானம் ஆனது கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை இணைக்கின்றது, பாவத்தினால் நாம் அடைந்த கடன் அதன்மூலம் தீர்க்கப்படுகிறது என்று பவுல் போதிக்கிறார். ஆனால் இது நம்மை உயிர்த்தெழுதலோடும் இணைத்துள்ளது, அதனால் நம்முடைய ஆவி இந்த வாழ்க்கையில் உயிர்பிக்கப்படுகிறது, மற்றும் வருங்காலத்தில் நம்முடைய சரீரம் உயிர்த்தெழப்போகிறது. 1 கொரிந்தியர் 15:21-22, பிலிப்பியர் 3:10-12, மற்றும் கொலோசெயர் 2:12 ஆகிய பகுதிகளில் இயேசுவின் உயிர்த்தெழுதலுடன் நாம் இணைக்கப்பட்டிருப்பது போதிக்கப்பட்டுள்ளது.

அதன் விளைவாக இயேசுவோடு அவருடைய உயிர்த்தெழுதலில் இணைக்கப்பட்டுள்ள நம்முடைய உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். 1 கொரிந்தியர் 15:20-23 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று… அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்: முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:20-23).

இங்கே பவுல் இயேசுவின் உயிர்த்தெழுதலை விளைவின் முதற்பலனாக குறிப்பிடுகிறார் அது அவரோடு சேர்ந்த யாவரையும் உள்ளடக்கியதாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டில், தேவன் விளைவின் முதல் பலன்களை காணிக்கையாக அவருக்கு கொண்டுவரும்படி இஸ்ரவேலருக்கு கட்டளை கொடுத்தார். அதை நாம் லேவியராகமம் 23:17 இல் உதாரணமாக காணலாம். முதல் பலன்கள் என்பது மொத்த அறுவடையில் முதலாவது பங்காகும், அது ஒட்டுமொத்த அறுவடையையும் குறிப்பதாகும். கர்த்தருக்கு முதலாவது பங்கை தருவதன் மூலம், தேவன் மீதமுள்ள எல்லா அறுவடையையும் ஆசீர்வதிப்பார் என்று இஸ்ரவேலர்கள் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினர். இயேசுவின் உயிர்த்தெழுதலை தந்ததன் மூலம், நம்மையும் அதேபோல உயிர்த்தெழ செய்வதற்கு தேவன் நோக்கம் வைத்துள்ளதை தேவன் வெளிப்படுத்தியுள்ளார். ஆகவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக தேவன் நம்மை அந்த நாளுக்கு என்று குறித்துள்ளார் என்பதை அறிந்து நம்முடைய எதிர்கால உயிர்த்தெழுதலை குறித்து நமக்கு மிகப்பெரிய நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

இதுவரை உயிர்த்தெழுதல் பற்றிய நம்முடைய கற்றுக்கொள்ளுதலில் நாம் சரீர மரணத்தை விளைவித்த சாபம் மற்றும் சரீரத்திற்கு ஜீவனை அளிக்கும் சுவிசேஷத்தை பற்றியும் பார்த்தோம். இந்த வேளையிலும் நம்முடைய சரீரங்கள் எவ்விதமாக மீட்பை அனுபவிக்க போகின்றன என்பதைப் பார்ப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

## மீட்பு

நம் சரீரங்களின் மீட்பை மூன்று நிலைகளில் கருத்தில் கொள்வோம்: முதலாவதாக, பூமியில் நம் தற்போதைய வாழ்க்கையில் விசுவாசிகள் அனுபவிக்கும் விஷயங்கள். இரண்டாவதாக, நம் சரீர மரணத்துடன் தொடங்கும் நம் சரீரங்களின் இடைப்பட்ட நிலை. மூன்றாவதாக, கிறிஸ்து திரும்பும்போது தொடங்கும் உயிர்த்தெழுதலின் புதிய வாழ்க்கை. நமது தற்போதைய வாழ்க்கையைப் பற்றி முதலில் பார்க்கத் தொடங்குவோம்.

### தற்போதைய வாழ்க்கை

கடைசி நாளில் நிகழும் நம் உயிர்த்தெழுதலின் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் பொதுவாக தம் சரீரங்களின் மீட்பைப் பற்றி பேசினாலும், நாம் முதலில் விசுவாசத்திற்குள் வரும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்ததிலிருந்தே நம் சரீர இரட்சிப்பு தொடங்குகிறது என்று வேதாகமம் சரியாக போதிக்கிறது. உதாரணமாக, ரோமர் 8:9-11 இல் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்தலைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இது நம் உடனடி சரீர உயிர்த்தெழுதலுக்கு வழிவகுக்கவில்லை என்றாலும், எபேசியர் 1:13-14 இல் பவுல் போதித்தபடி, எதிர்காலத்தில் நம் சரீரங்களின் முழு மீட்புக்கான உத்தரவாதத்துடன் அது நம்மை முத்திரையிடுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலும் நம் வாழ்நாள் முழுவதும் பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்வதால் நம் சரீரங்கள் அவரிடமிருந்து பல பிரயோஜனங்களைப் பெறுகின்றன, குறிப்பாக அவரின் பரிசுத்தமாக்குதல் மூலம் நமக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. நம் சரீரங்களைப் பரிசுத்தமாக்குவது நம் ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்துவதைப் போன்றது. பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுக்காக தனியாகப் பிரித்து நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். அவர் நம் வாழ்நாள் முழுவதும் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார், ஏனெனில் நம் சரீரங்களில் நாம் செய்யும் பாவங்களை அவர் மன்னிக்கிறார், மேலும் தேவனை கனப்படுத்தும் விதத்தில் நம் சரீரங்களைப் பயன்படுத்த வைக்கிறார். இப்படியாக இது 1 கொரிந்தியர் 6:20 இல் பவுல் போதித்தபடி, நம் சரீரங்களால் தேவனை கனப்படுத்தவும், ரோமர் 12:1 இல் நாம் வாசிப்பது போல, நம் சரீரங்களை ஜீவ பலிகளாக தேவனுக்குக் கொடுக்கவும் வழிவகுக்கிறது.

## இடைப்பட்ட நிலை

விசுவாசிகளின் தற்போதைய வாழ்க்கையில் நம் சரீரங்களின் மீட்பின் தொடக்கத்திற்குப் பிறகு, நமது சரீர மரணத்தின் போதும் இதன் செயல்முறை தொடர்கிறது. நாம் மரிக்கும்போது, நம் சரீரங்கள் நம் ஆத்துமாவிலிருந்து தற்காலிகமாகப் பிரிக்கப்படுகின்றன. இந்த நிலை பெரும்பாலும் இடைப்பட்ட நிலை என்று அழைக்கப்படுகிறது – இப்போது பூமியில் நம் வாழ்வுக்கும், உயிர்த்தெழுதலில் நாம் அனுபவிக்கும் வாழ்க்கைக்கும் இடைப்பட்ட நிலையை இது குறிக்கிறது. இடைப்பட்ட நிலையின் போது, நம் ஆத்துமா கிறிஸ்துவுடன் பரலோகத்தில் வாழ்கிறது. மத்தேயு 17:3 மற்றும் 2 கொரிந்தியர் 5:6-8 போன்ற இடங்களில் வேதம் இதைப் பற்றி பேசுகிறது.

ஆனால் நம் ஆத்துமா பரலோகத்தில் இருக்கும்போது, நம் சரீரங்கள் பூமியில் இருக்கும். நம் சரீரங்கள் சிதைவடைகின்றன என்கிற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளதால், நம் சரீரங்கள் இன்னும் பாவத்தால் கெட்டுப்போகின்றன. ஆனால் அவைகளை கெட்டுப்போகச் செய்யும் பாவம் இனி பாவம் செய்ய நம்மை தூண்டாது. ஒன்று, ரோமர் 6:2-11 இல் பவுல் போதித்தபடி, மரணம் பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது. இன்னொன்று, நல்லதோ கெட்டதோ எந்த சிந்தனையும் செயலும் உணர்வும் இல்லாத நிலையில், நம் சரீரங்கள் மயக்க நிலையில் கல்லறையில் கிடக்கின்றன.

ஆனால் மரணத்தில் நம் சரீரங்களும் ஆத்துமாக்களும் தற்காலிகமாக பிரிக்கப்பட்டாலும், நம் சரீரங்கள் நம் பாகமாக இல்லாமல் போகும் என்று வேதம் ஒருபோதும் சொல்லவில்லை. அவை புதைக்கப்பட்டாலும், எரிக்கப்பட்டாலும், அல்லது தொலைந்து போனதாகத் தோன்றினாலும், நம் சரீரங்கள் தொடர்ந்து நம் பகுதியாகவே இருக்கின்றன. வேதத்தில் இதற்கு எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. உதாரணமாக, சாமுவேல் ராமாவிலே அவரது வீட்டில் அடக்கம் செய்யப்பட்டதாக 1 சாமுவேல் 25:1 கூறுகிறது. தாவீதின் நகரமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எருசலேமில் தாவீது அடக்கம் செய்யப்பட்டதாக 1 இராஜாக்கள் 2:10 கூறுகிறது. மேலும் 1 மற்றும் 2 ராஜாக்கள் மற்றும் 2 நாளாகமம் முழுவதும் வழக்கமாக நடைபெறுகிற காரியம் என்னவென்றால், யூதாவின் ராஜாக்கள் அவர்களின் முற்பிதாவான தாவீதின் நகரத்தில் அடக்கம் செய்யப்பட்டனர். அவர்களின் சரீரங்கள் இன்னும் அவர்களுக்கு சொந்தமானவை தான், அவை இன்னும் அவர்களின் ஒரு பகுதியாகவே இருக்கின்றன.

*வெஸ்ட்மின்ஸ்டர் ஷார்ட்டர் கேட்டகிசம்* எண் 37 இல் நம் மரணம் இவ்வாறு விவரிக்கப்படுகிறது. பாவம் என்பது என்ன? எனும் கேள்விக்கு பதிலாக:

> கிறிஸ்துவிடமிருந்து விசுவாசிகள் அவர்களின் மரணத்தில் என்ன நன்மைகளைப் பெறுகிறார்கள்?

இவ்வாறு பதில் தருகிறது:

> விசுவாசிகளின் ஆத்துமாக்கள் அவர்களின் மரணத்தின் போது பரிசுத்தத்தில் பரிபூரணமடைகின்றன, உடனடியாக மகிமையில் பிரவேசிக்கின்றன; அவர்களின் சரீரங்கள், கிறிஸ்துவில் இன்னும் ஐக்கியமாக இருப்பதால், உயிர்த்தெழுதல் வரை, அவர்களின் கல்லறைகளில் ஒய்வெடுக்கின்றன.

விசுவாசிகளுக்கு மரணத்தில் இரண்டு விதிகள் உள்ளன – ஒன்று, அவர்களின் ஆத்துமாவுக்கும், மற்றொன்று அவர்களின் சரீரத்திற்கும் என்று கேட்டகிசம் கூறுகிறது. நம் ஆத்துமாக்கள் பரலோகத்தில் மகிமையில் பிரவேசிக்கின்றன, ஆனால் நம் சரீரங்கள், இன்னும் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தில் இருப்பதால், அவர்களின் கல்லறைகளில் ஒய்வெடுக்கின்றன – அதாவது அவை இளைப்பாறுகின்றன, உயிர்த்தெழுதலில் புதிய வாழ்க்கைக்காகக் காத்திருக்கின்றன.

> நமது ஆத்துமா பரலோகத்திலும், நமது சரீரம் கல்லறையிலும் இருக்கும்போது, ஆம், நாம் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்கிறோம் என்று சொல்வது உண்மை என்று நான் நினைக்கிறேன். அதற்கு இன்னும் சில விளக்கம் தேவை, மற்றும் ஷார்ட்டர் கேட்டகிசத்தில் இதைக் குறித்து ஒரு அருமையான பதில் இருக்கிறது. "விசுவாசிகளின் ஆத்துமாக்கள் மரணத்தின் போது பரிசுத்தத்தில் பரிபூரணமடைந்து உடனடியாக மகிமையில் பிரவேசிக்கின்றன. அவர்களுடைய சரீரங்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு, உயிர்த்தெழுதல் வரை அவர்களின் கல்லறைகளில் இளைப்பாறுகின்றன. ஆத்துமா சரீரத்தில் இருந்து வெளியேறுவது பற்றிய முதல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பகுதி குறித்த காரியம் 2 கொரிந்தியர் 5 வசனம் 1 முதல் 10 வரை உள்ளது. பவுல் தனது தற்போதைய அழிந்து போகிற சரீரத்தை பூமிக்குரிய கூடாரமாகப் பேசுகிறார், மேலும் அவர் மரணத்தையும் எதிர்பார்க்கவில்லை, ஏனென்றால் அவரது ஆத்துமா அவரது சரீரத்திலிருந்து பிரிக்கப்படும், இது இயற்கைக்கு மாறான நிலை.
>
> Dr. நாக்ஸ் சாம்ப்ளின்

ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருப்பது போன்ற இந்த பதற்றம் பரலோகத்தில் கூட உணரப்படுகிறது. நம் எதிர்பார்ப்புகளைத் தாண்டி பரலோகமானது அற்புதமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நம் சரீரங்கள் உயிர்த்தெழுப்பப்படும் வரை பரலோகத்தில் கூட நம் இரட்சிப்பு முழுமையடையாததாகத்தான் இருக்கும். ரோமர் 8:23 இல் சரீர உயிர்த்தெழுதல் பற்றி பவுல் எப்படி பேசினார் என்பதைக் கவனியுங்கள்:

> அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:23).

இங்கே, நம் உயிர்த்தெழுந்த சரீரங்கள் நம்மிடம் இல்லாததால், நாம் இந்த வாழ்க்கையில் தவிப்பதாக பவுல் கூறினார். ஆனால் பரலோகத்தில் உள்ள ஆத்துமாக்கள் இன்னும் தங்கள் புதிய சரீரங்களுக்காகக் காத்திருக்கின்றன. எனவே, அவைகள் தங்கள் சரீர மீட்புக்காகக் காத்திருப்பதால், அவைகளும் தவிக்கின்றன என்று நினைப்பது அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

> நாம் முற்றிலும் திருப்தி அடைந்து சரீரமானது சிதைந்து போவதில் மிகவும் மகிழ்ச்சியடையும்படிக்கு நாம் பெறப்போகிற சரீரங்கள் வசதியான பூமிக்குரிய உடைகளும் விருப்ப உபகரணங்களுமாய் இருக்கின்றன என்று சிலர் நினைக்கிறார்கள். இது வேதாகம ரீதியிலானது என்பதை விட பிளேட்டோவின் சிந்தனையைப் போலுள்ளது. எனவே, உங்கள் தனிப்பட்ட மரணத்திற்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலுக்கும் இடையில் இருக்கிற இந்த இடைப்பட்ட நிலை எப்படி இருக்கும்? இது எதைப் போன்று இருக்கும்? அதற்கான புகைப்பட அறிக்கை நமக்கு வழங்கப்படவில்லை. அது பற்றிய விரிவான விளக்கங்கள் நமக்கு வழங்கப்படவில்லை. ஆனால் வேதத்திலிருந்து நமக்கு கொடுக்கப்பட்ட பதில் மிகவும் உறுதியானதாகவும்

> மிகவும் தொடர்புபடுத்தக்கூடியதாகவும் இருக்கிறது. நாம் கர்த்தருடன் இருப்போம்.
>
> Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

நமது தற்போதைய வாழ்க்கை மற்றும் நமது சரீர மரணம் ஆகியவற்றை மனதில் கொண்டு, புது வாழ்வில் நம் சரீரங்களின் மீட்பு எவ்வாறு நிறைவடைகிறது என்பதைப் பார்க்க நாம் தயாராக உள்ளோம்.

## புது வாழ்வு

பொதுவான உயிர்த்தெழுதலில் நம்முடைய சரீரங்கள் மீட்டெடுக்கப்படும்போது புதிதும் பூரணமுமான ஜீவனை பெற்றுக்கொள்ளும். உயிர்த்தெழுதலில் இறுதியாக மற்றும் நிரந்தரமாக நம்மை விட்டு பாவத்தின் விளைவுகள் அப்புறப்படுத்தப்படும். ரோமர் 8:23, 1 கொரிந்தியர் 15:12-57, மற்றும் பிலிப்பியர் 3:11 ஆகிய வேத பகுதிகளில் இதை நாம் பார்க்கிறோம். மகிமைப்படுத்தப்பட்ட, பூரணமான மனிதர்களாக நாம் மாற்றப்படுவதால் இந்த இரட்சிப்பின் நிலையை இறையியல் வல்லுநர்கள் மகிமைப்படுத்தப்படுதல் என்று பெரும்பாலும் குறிப்பிடுகின்றனர். வேதாகமம் நம்முடைய மகிமைப்படுத்தப்படுதலை பற்றி அதிகமான விவரங்களை தரவில்லை. எனினும் பவுல் சுருக்கமாக 1 கொரிந்தியர் 15 இல் நம்முடைய சரீரங்களை நாம் பெறப்போகும் மகிமையுள்ள சரீரங்களுடன் ஒப்பீடு செய்துள்ளார். 1 கொரிந்தியர் 15:42-44 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்;கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு (1 கொரிந்தியர் 15:42-44).

நம் உயிர்த்தெழுதலின் போது கொண்டிருக்கக்கூடிய சரீரங்களுக்கும் தற்போதுள்ள சரீரங்களுக்கும் இடையில் துல்லியமான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் என்ன என்பதை நம்மால் சொல்ல இயலாது. இயேசு கிறிஸ்துவின் சரீரமானது உயிர்த்தெழுதலின் நிமித்தம் மாற்றத்திற்கு உட்பட்டது போல, நம்முடைய சரீரமும் மாற்றமடையும். அவைகள் புதுப்பிக்கப்பட்டு பூரணம் அடையும். அவைகள் அழிவில்லாமலும், மகிமையானதாகவும், வல்லமையானதாகவும் மற்றும் ஆவிக்குரியதாகவும் இருக்கும். ஆயினும் அவைகள் முழுவதுமாக மனுஷ சரீரமாக இருக்கும். நம்

உயிர்த்தெழுதலில், நாம் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தாரோ அதைப்போன்ற ஜனங்களாக நாம் மாறியிருப்போம்.

பாவத்தின் விளைவாக நம்முடைய சரீரங்கள் மரிக்கின்றன; வீழ்ச்சியின் மூலம் உண்டான மனித அக்கிரமத்திற்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு சரீர மரணமாகும். ஆனால் சுவிசேஷம் சரீரத்தின் மீட்டெடுப்பை பற்றி உரைக்கின்றது என்பதே நற்செய்தியாகும். நம்மை சரீரமாகவும் ஆத்துமாவாகவும் முழுமையாக இரட்சிக்க இயேசு வந்தார் என்று அது கூறுகின்றது. இந்த மீட்பானது மகிமையுள்ளது. இது மிகப்பெரிய சந்தோஷத்திற்கும் கொண்டாட்டத்துக்கும் காரணமாய் இருக்கின்றது. நம்முடைய சரீரங்களின் உயிர்த்தெழுதலினால், இறுதியாக நாம் மரணத்திற்கு எதிரான ஜெயத்தை அறிவிக்க முடிகிறது. புதிய வானம் மற்றும் புதிய பூமியில் தேவன் நமக்காக வைத்துள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் இறுதியாக ஆயத்தப்படுத்தப்படுகிறோம். மேலும் இயேசு கிறிஸ்துவின் ஜெயத்தை இறுதியாக நாம் நம்முடைய சொந்த கண்களால் காணப்போகிறோம்.

இதுவரை இரட்சிப்பைப் பற்றிய நமது கலந்துரையாடலில், *அப்போஸ்தல பிரமாணம்* பாவங்களின் மன்னிப்பு மற்றும் சரீர உயிர்த்தெழுதலை பற்றி கூறியிருக்கும் காரியங்களை பேசினோம். இந்த வேளையில் நாம் நம்முடைய கடைசி தலைப்பான நித்தியமான ஜீவனுக்கு நேராக திரும்ப ஆயத்தமாயிருக்கிறோம்.

# நித்தியமான ஜீவன்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* தனது கடைசி விசுவாச கோட்பாட்டில் நித்தியமான ஜீவனை பற்றி குறிப்பிட்டுள்ளது:

> நித்தியமான ஜீவனை …
>
> நான் விசுவாசிக்கிறேன்.

இந்த இடத்திலே சரீரங்களின் உயிர்த்தெழுதலுக்கு பிந்தைய நித்தியமான ஜீவன் அல்லது பெரும்பாலும் நித்திய ஜீவன் என்றழைக்கப்படும் காரியத்தை அப்போஸ்தல பிரமாணம் பேசுகிறது. பூரணமான, ஆசீர்வாதமான,அழிவில்லாத, முடிவில்லாத வாழ்க்கை தேவனுடைய உண்மையான ஜனங்களுக்கு கொடுக்கப்படும் என்று பிரமாணம் உறுதிப்படுத்துகிறது.

நித்திய ஜீவனை பற்றி அநேக காரியங்களை நம்மால் கூற முடியும் என்றாலும், இந்த பாடத்தில் மூன்று விஷயங்களை நாம் கருத்தில் கொள்ளப்போகிறோம். முதலாவது, நித்திய ஜீவனின் காலத்தை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குறிப்பிடப்போகிறோம். எப்பொழுது அது ஆரம்பிக்கிறது? இரண்டாவது, நித்திய ஜீவனின் தரத்தைப் பற்றி பேசப்போகிறோம். மற்ற ஜீவன்களை காட்டிலும் இது எவ்விதத்தில் வித்தியாசப்படுகின்றது? மேலும் மூன்றாவதாக நாம் நித்தியமாக வாழப்போகிற நித்திய ஜீவனின் இடத்தைக் குறிப்பிடப்போகிறோம். நித்திய ஜீவனின் கால நேரத்திலிருந்து நாம் ஆரம்பிக்கலாம்.

## கால நேரம்

> நித்திய ஜீவன் எப்போது தொடங்குகிறது? நாம் ஜீவன் பெறவும், அதை தாராளமாகப் பெற்றுகொள்ளவும் நான் வந்திருக்கிறேன் என்று, கிறிஸ்து சொன்னார். கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கும் கிறிஸ்துவின் சீஷராக இருப்பதற்கும் அவர் தரமான உயர்ந்த வாழ்க்கை முறையை நமக்கு அறிமுகப்படுத்துகிறார், ஆனால் அதுவா நித்திய ஜீவன்? இந்த மரண இருப்பு கோளத்திலிருந்து நாம் வேறு பக்கம் உள்ள வாழ்க்கைக்குச் செல்லும்போது நித்திய ஜீவன் தொடங்குமா? நித்திய ஜீவன் தொடங்குவது அப்போதா? ஒரு வகையில், ஆம் என சொல்ல முடியும். ஆனால், இன்னொரு அர்த்தத்தில், புதிய ஜீவனும், நம்மை கல்லறை வழியாக எடுத்துச் சென்று தேவனுடன் என்றும் இருக்கப்போகும் முடிவில்லாத நித்தியத்திற்கு நம்மை வழிநடத்தும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாழ்க்கையுமானது இப்போது நமக்குள் ஒரு விதையாக விதைக்கப்பட்ட ஒரு ஜீவனாகும். அதனால் முடிவடையாத வாழ்க்கை இப்போது தொடங்குகிறது, மேலும் இந்த நித்திய வாழ்க்கை என்பது முடிவில்லாத காலத்தால் வரையறுக்கப்பட்ட வாழ்க்கை மட்டுமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும், ஜீவனானது இப்போது கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மற்றும் தேவனை மையமாகக் கொண்ட மற்றும் மனிதர்களுக்காக வடிவமைக்கப்பட்ட அனைத்தையும் முழுமையாக மீட்டெடுப்பதை நோக்கி நகரும் ஒரு ஜீவனாக தர ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. நாம் இப்பொழுது வேதனை மிகுந்த, போராட்டமான, உடைந்துப்போன உலகில் மூழ்கியிருந்தாலும் கூட அந்த ஜீவனில் பங்கேற்கலாம்.
>
> Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

விசுவாசிகள் நித்திய ஜீவனை தற்போதைய யதார்த்தமாக ஏற்கனவே பெற்றிருக்கிறார்கள் என்று வேதம் அடிக்கடி கூறுகிறது. இதை நாம் யோவான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

10:28, 1 தீமோத்தேயு 6:12, 1 யோவான் 5:11-13 மற்றும் பல இடங்களில் பார்க்கிறோம். ஒரு உதாரணமாக, யோவான் 5:24 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்:

> என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 5:24)

இயேசுவும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களும் சில சமயங்களில் நித்திய அல்லது நித்தியமான ஜீவன் என்பது கிறிஸ்துவோடு நாம் இணைந்ததன் விளைவாகும் என்று கூறியுள்ளனர். நிச்சயமாக இது உண்மை தான். நம் சரீரங்கள் மரித்தாலும், நம் ஆத்துமாக்கள் ஒருபோதும் மரிப்பதில்லை. இப்போது நமக்கிருக்கும் ஆவிக்குரிய ஜீவனும் நமக்கு என்றென்றைக்கும் இருக்கப்போகும் ஜீவனும் ஒன்று தான்.

மறுபுறம், இறுதி நியாயத்தீர்ப்பின் போது நமக்கு நித்திய ஜீவன் நம் சுதந்தரமாக வழங்கப்படும் என்ற உண்மையைப் பற்றி வேதம் இன்னும் அடிக்கடி பேசுகிறது. மத்தேயு 25:46, மாற்கு10:29-30, யோவான் 12:25, ரோமர் 2:5-7, மற்றும் யூதா 21 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். ஒரு உதாரணமாக, யோவான் தனது சுவிசேஷத்தில் 6:40 இல் எழுதியதை கவனியுங்கள்:

> குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது (யோவான் 6:40).

யோவான் இங்கே குறிப்பிட்டது போல, வேதாகமம் நித்திய ஜீவனை நாம் முழுமையாக பெற்றுக்கொள்வதை நம் சரீர உயிர்த்தெழுதலுடன் தொடர்புபடுத்துகிறது. நம் சரீரம் உயிரோடு எழுப்பப்படும்போது, நாம் முழுமையாக மீட்டெடுக்கப்பட்ட மனிதர்களாக, சரீரமும் ஆத்துமாவுமாக என்றென்றும் வாழ்வோம்.

> கிறிஸ்துவோடு நாம் ஒன்றிணைவதன் மூலம், கிறிஸ்துவில் நாம் என்ன பெறுகிறோம் என்பதை விவரிப்பது உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன், அது இறையியலில் ”ஏற்கனவே” மற்றும் ”இன்னும் இல்லை” எனப்படுகிறது. மேலும், கிறிஸ்துவின் மீது நாம் நம்பிக்கை வைத்து கிறிஸ்துவைப் பெறும்போது, நித்திய ஜீவனை உள்ளடக்கிய கிறிஸ்துவின் நன்மைகள் ”ஏற்கனவே” நம்முடையவைகளாகின்றன என்று நான் சொல்கிறேன். அவைகள் நம்முடையவைகள், நாம் நித்திய ஜீவனை கொண்டுள்ளோம். அதே நேரத்தில், ”இன்னும் இல்லை”,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்ற அர்த்தத்தில் நிச்சயமாக, நாம் கிறிஸ்துவை பெற்ற பிறகும், நம்மில் பலர் வயதாகிவிடுவோம், நம்மில் பலர் நோய்வாய்ப்படுவோம், கிறிஸ்து முன்பதாகவே வராமல் போனால் நம்மில் பலர் மரணத்தை அனுபவிப்போம். அந்த வகையில், நித்திய ஜீவனின் ”இன்னும் இல்லை” என்கிற காரியம் இன்னும் நிறைவேற நமக்கு காத்திருக்கிறது. எனவே ”ஏற்கெனவே” – ”இன்னும் இல்லை,” என்கிற இறையியல் கோட்பாடு நாம் புரிந்து கொள்ள உதவுகிறது என்று நினைக்கிறேன், ஆமாம், நமக்கு ஒரு நித்திய ஜீவன் இருக்கிறது, அதே நேரத்தில், புதிய வானம் மற்றும் புதிய பூமியில் நித்திய வாழ்க்கை நமக்கு காத்திருக்கிறது.

Dr. ஜெப்ரி கே. ஜூ

நாம் மறுபடியும் பிறக்கும்போது இந்த வாழ்க்கையில் நம் ஆத்துமாக்களுக்கான நித்திய வாழ்க்கை தொடங்குகிறது என்று சொல்வது நியாயமானதாகும். ஆனால் இறுதி நியாயத்தீர்ப்பில் நம் சரீரங்கள் எழுப்பப்படும் வரை நாம் முழுமையாக ஜீவனோடு இருக்கமாட்டோம். அப்போதுதான் நமது முழுமையும் தேவனுக்கு முன்பாக வாழும். அதற்கு முன், நம் ஆத்தும மீட்பின் மூலம் நித்திய வாழ்க்கையின் முன்னோட்டம் நமக்கு உள்ளது. ஆனால் நம் சரீரத்துக்கு புதிய ஜீவன் கொடுக்கப்பட்டால்தான் நாம் உண்மையில் தேவன் நினைத்தபடி வாழ்வோம்.

நித்திய வாழ்க்கையின் நேரத்தைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, அதன் தரத்தைப் பற்றிப் பார்ப்போம்.

## தரம்

வேதாகமத்தில், நித்திய ஜீவன் என்பது வெறுமனே நம் இருப்பு மற்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் நினைவுகளாக அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய நித்திய தீர்ப்பின் கீழ் உள்ள ஜனங்கள் கூட தொடர்ந்து ஜீவிப்பார்கள் மற்றும் நினைவுள்ளவர்களாகவும் இருப்பார்கள். மாறாக, நித்திய ஜீவனின் முக்கிய குணம் நாம் தேவனின் ஆசீர்வாதத்தில் என்றென்றும் வாழ்வோம் என்பதே. இந்த அர்த்தத்தில், ஜீவனைப் பெறுவது தேவனின் தயவையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதாகும். மாறாக, மரணத்தை அனுபவிப்பது என்பது அவரது கோபத்திற்கும் சாபத்திற்கும் உள்ளாவதாகும். நித்திய ஜீவன் மற்றும் நித்திய மரணம் இரண்டும் தொடர்ந்து இருக்கக்கூடிய நிலையை குறிக்கிறது. அவற்றுக்கிடையேயான வேறுபாடு அவைகளின் தரமாகும். யோவான் 17:3 இல் இயேசு ஜெபித்தபடி:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:3)

இங்கே, நித்திய ஜீவன் என்பது தேவனையும் இயேசுவையும் அறிவதற்கு சமம் என்று இயேசு கற்பித்தார். இந்த சூழலில், அறிதல் என்ற காரியம் ஒரு அன்பான உறவைக் குறிக்கிறது. இங்கே இயேசுவின் கருத்து என்னவென்றால், நித்திய வாழ்க்கை என்பது வெறும் ஜீவித்திருத்தல் அல்லது நினைவோடு இருத்தல் என்கிற அடிப்படையில் வரையறுக்கப்படவில்லை, மாறாக தேவனுடைய அன்பை அனுபவித்ததன் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது.

அல்லது ரோமர் 7:9-11 இல் ஜீவன் மற்றும் மரணம் பற்றி பவுல் பேசிய விதத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்:

> முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது (ரோமர் 7:9-11).

பவுல் இங்கு விவரித்த முழு காலத்திலும், அவர் உடல் மற்றும் மனரீதியாக உயிருடன் இருந்தார். அவர் ஒரு உணர்வுள்ள, பகுத்தறிவு உள்ளவராக இருந்தார். அப்படியிருந்தும், அவர் முதலில் உயிருடன் இருந்ததாகவும், பின்னர் இறந்துவிட்டதாகவும், கொல்லப்பட்டதாகவும் கூறினார். தேவனுக்கு முன்பாக அவர் நிற்பதுதான் வித்தியாசம். நியாயப்பிரமாணம் அவரை கண்டிக்கும் முன், அவர் ஜீவனுடன் இருந்தார். ஆனால் நியாயப்பிரமாணம் அவரை தேவனின் சாபத்திற்கு உட்படுத்தியவுடன், பவுல் மரித்துவிட்டார். பின்னர், அவர் கிறிஸ்துவிடம் வந்து, சாபம் நீக்கப்பட்டதும், அவர் ஒரு புதிய ஜீவனைப் பெற்றவர் என்று அழைக்கப்பட முடிந்தது. யோவான் 5:24 மற்றும் 1 யோவான் 3:24 போன்ற இடங்களில் இதே கருத்தை நாம் காண்கிறோம்.

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: கடைசி நாளில், மரித்தவர்கள் அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். நம் அழியாத ஆத்துமாக்கள் நம் உயிர்த்தெழுந்த சரீரங்களுடன் மீண்டும் ஒன்றிணைக்கப்படும். யோவான் 5:28-29 இன் படி, நன்மை செய்தவர்களுக்கு வெகுமதி கிடைக்கும், தீமை செய்தவர்கள் கண்டிக்கப்படுவார்கள். இருவரும் தங்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தில் என்றென்றும் நினைவுகளுடன் வாழ்க்கையை வாழ்வார்கள். ஆனால் வேதாகமம் நீதிமானின் முடிவை ”ஜீவன்” என்றும், துன்மார்க்கரின் முடிவை ”மரணம்” என்றும் அழைக்கிறது. அவர்கள் இருப்பார்களா அல்லது சிந்திக்கிறார்களா அல்லது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனுபவங்களைக் கொண்டிருக்கிறார்களா என்பதல்ல வித்தியாசம். தேவனுடனான அவர்களின் உறவுதான் வித்தியாசம். நாம் தேவனுடைய ஆசீர்வாதத்தின் கீழ் இருந்தால், நாம் ஜீவனுடன் இருக்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது. நாம் அவருடைய சாபத்திற்கு உட்பட்டால், நாம் மரணித்துவிட்டோம் என்று அது கூறுகிறது. எனவே, நித்திய ஜீவன் என்பது தேவனுடனான ஆசீர்வதிக்கப்பட்ட உறவில் தொடர்ந்து உணர்வுடன் இருப்பது. ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் என்ன? ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை எப்படி இருக்கும்?

> தேவனுடன் நம் நித்திய வாழ்க்கையை நாம் மேகங்களில் மிதப்பது போல் கருதக்கூடாது என்று நான் நினைக்கிறேன். ஆனால் நாம் புதிய உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெறுவோம்; அவை பாவம், நோய் மற்றும் மரணத்தால் தொடப்படாத சரீரங்கள் ஆகும். நாம் அழியாமல் இருப்போம்; நாம் ஒருபோதும் மரிக்க மாட்டோம். மேலும் நாம் ஒரு புதிய பூமியில் வாழ்வோம். இப்போது, அதில் என்ன அடங்கும்? என்ற விவரங்கள் நமக்கு இல்லை. நமக்கு எல்லா விவரங்களும் தெரியாது, ஆனால் நமக்கு சில பொறுப்புகள் இருக்கும் என்று நமக்குத் தெரியும். நாம் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வோம். இது புது பிரபஞ்சமாக இருக்கிறபடியால் தேவன் சிருஷ்டித்த புதிய உலகத்துடன் நாம் தொடர்பு கொள்ளுவோம் என்று நான் நினைக்கிறேன். ஆகையால் நாம் செய்ய வேண்டிய குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும் என நான் நினைக்கிறேன். ஆனால் அடிப்படையில், புதிய ஏற்பாடு வலியுறுத்துவதை நாம் செய்ய மாட்டோம், அது கவர்ச்சிகரமானதாகவும் நிறைவாகவும் இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் தேவன் நம்மோடு இருப்பார் என்பதையே புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. அவருடைய முகத்தைப் பார்ப்போம். அவரோடுள்ள ஐக்கியம் நமது முழு நிறைவான சந்தோஷமாயிருக்கும்.
>
> Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

1873 முதல் 1957 வரை வாழ்ந்த புகழ்பெற்ற இறையியலாளர் லூயிஸ் பெர்கோஃப், நித்திய ஜீவனின் இறுதி நிலையை பகுதி 6, அத்தியாயம் 5 இல் தனது *சிஸ்டமேடிக் தியாலஜி* என்ற புத்தகத்தில் விவரித்தார். அவர் அதை எப்படி எழுதியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள்:

> இந்த வாழ்க்கையின் முழுமை தேவனோடு ஐக்கியமாக இருப்பதில் அனுபவிக்கப்படுகிறது … அவர்கள் இயேசு கிறிஸ்துவில் தேவனை நேருக்கு நேர் பார்ப்பார்கள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவரிடம் முழு திருப்தியைக் காண்பார்கள், அவரில் மகிழ்வார்கள், அவரை மகிமைப்படுத்துவார்கள் ... அங்கீகாரமும் சமூக உறவும் உயர்ந்த நிலையில் இருக்கும் .. அனைவரின் மகிழ்ச்சியும் பூரணமாகவும் நிறைவாகவும் இருக்கும்.

நித்திய ஜீவனின் தன்மையைப் பற்றி வேதாகமம் அடிக்கடி பேசாதது ஒருவேளை விசித்திரமாகத் தோன்றலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, மனந்திரும்பி கிறிஸ்துவில் இரட்சிக்கிற விசுவாசம் உள்ளவர்களுக்கு சுவிசேஷம் வழங்கும் பெரிய வெகுமதியாக நித்திய ஜீவன் உள்ளது. ஆனால் நிஜம் என்னவென்றால், வேதாகமம் நித்திய ஜீவனைப் பற்றி பொதுவாகப் பேசுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 21:3-4 தேவன் தமது ஜனங்களுடன் இருப்பார், மரணம் அல்லது துக்கம் இருக்காது என்று நமக்கு சொல்கின்றது. நாம் புதிய சரீரங்களை பெறுவோம், பாவத்தின் பிரசன்னம், தீமை மற்றும் தாக்கத்திலிருந்து நாம் முற்றிலும் விடுபடுவோம். அதைப் பற்றின விவரங்கள் என்ன? உண்மை என்னவென்றால், வேதாகமம் அவைகளைப் பற்றி மிகக் குறைவாகவே கூறுகிறது. அதற்கு பதிலாக, தேவன் நல்லவர் என்று நம்புவதற்கு இது பெரும்பாலும் நம்மை ஊக்குவிக்கிறது, மேலும் அவர் நமக்காக வைத்திருக்கும் ஆச்சரியங்களைப் பற்றி அதிகம் யூகிக்க வேண்டாம். 2 கொரிந்தியர் 21:3-4 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்... மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்... அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டான். மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் (2 கொரிந்தியர் 12:2-4).

இந்த அனுபவத்தைப் பற்றி பவுல் என்ன சொன்னார் என்பதைக் கவனியுங்கள். கேட்ட விஷயங்கள் விவரிக்க முடியாதவை – அவை மனித மொழியில் போதுமான அளவு விவரிக்க முடியாதவை. மேலும், இந்த மூன்றாம் வானத்தில் என்ன உள்ளது என்று சொல்ல மனிதனுக்கு அனுமதி இல்லை. தேவன் அதை இப்போது இரகசியமாக வைத்திருக்கிறார் என்பது மிகவும் அற்புதமானது.

இது பரலோகமே – அதாவது நம் உயிர்த்தெழுதலுக்கு முன்னிருந்த இடைப்பட்ட நிலை. பரலோகத்தின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட முடியாவிட்டால், நமது கடைசி கால வாழ்க்கையின் இரகசியங்கள் எந்த அளவுக்கு இருக்கும்? கிறிஸ்து மீண்டும் வரும்போது வாழ்க்கை எவ்வளவு அற்புதமாக இருக்கும் என்று யாரால் கற்பனை செய்ய முடியும்? இனி துக்கம், துன்பம், ஏமாற்றம் அல்லது மரணம் இருக்காது என்று வேதாகமம் சொல்கிறது.

இந்த விஷயங்கள் அற்புதமானவை மற்றும் உண்மை, ஆனால் வேதாகமம் அவற்றைப் பற்றிய பல விவரங்களை நமக்குச் சொல்லவில்லை.

நித்திய வாழ்க்கையின் கால நேரத்தையும் தரத்தையும் இப்போது நாம் கருத்தில் கொண்டுள்ளோம், நமது கடைசி தலைப்பான நாம் என்றென்றும் வாழும் இடத்திற்கு வருவோம்.

## இடம்

புதிய வானம் மற்றும் புதிய பூமி என நாம் நித்தியமாக வாழும் இடத்தைப் பற்றி வேதம் அடிக்கடி பேசுகிறது. இந்த வார்த்தைகளை ஏசாயா 65:17 மற்றும் 66:22, 2 பேதுரு 3:13 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 21:1 இல் காண்கிறோம். வானங்கள் மற்றும் பூமியின் இந்த மறு சிருஷ்டிப்பு வேதாகமத்தின் விரிவான கதைக்களத்தை முழுமையாக நிறைவு செய்கிறது. ஆதியாகமம் 1:1 இல் தேவன் வானங்களையும் பூமியையும் படைத்தபோது வரலாறு தொடங்கியது. ஆனால் பின்னர் மனிதகுலம் பாவத்தில் விழுந்ததால் அது சிதைந்து, தேவன் வாசம்செய்ய தகுதியற்றதாகிவிட்டது. வேதாகமத்தின் மீதமுள்ள காரியங்கள் மனுக்குலம் மற்றும் படைப்புகள் இரண்டும் எவ்வாறு மீட்கப்படுகின்றன என்ற கதையைச் சொல்கிறது. இயேசு திரும்பியவுடன், இறுதியாக வானங்களும் பூமியும் மீட்கப்பட்டு புதுப்பிக்கப்படும், அதனால் தேவன் இறுதியாக உயிர்த்தெழுப்பப்பட்ட ஜனங்களுடன் பூமியில் வாழ்வார். மத்தேயு 6:9-10 இல் அவர் இந்த வார்த்தைகளை ஜெபிக்க கற்றுக்கொடுத்த போது இயேசு மனதில் வைத்திருந்த நோக்கம் இதுதான்:

> நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.(மத்தேயு 6:9-10).

தேவதூதர்கள் மற்றும் மரித்துப்போன நீதிமான்களின் ஆத்துமாக்கள் வாழும் பரலோகத்திலும், நாம் வாழும் பூமியிலும் தேவனுடைய ராஜ்யம் முழுமையாக வெளிப்படுவதே எப்போதும் குறிக்கோளாக இருந்தது. இதனால்தான் தேவன் தனது ராஜ்யத்தை பூமிக்குக் கொண்டுவரும்படியும் , அவருடைய விருப்பம் பரலோகத்தைப் போலவே பூமியிலும் முழுமையாகக் கீழ்ப்படியப்படும்படி வேண்டிக்கொள்ளவேண்டும் என்று இயேசு நமக்குக் கற்பித்தார்.

இந்த புதிய சிருஷ்டிப்பை பற்றி வேதாகமம் அடிக்கடி பேசுவதில்லை என்றாலும், எங்கெங்கு இதை பற்றி வேதம் உரைக்கின்றதோ அங்கெல்லாம் மீட்கப்பட்ட ஜனங்களின் இறுதி இலக்கு பரலோகத்தில் அல்ல, ஆனால் புதுப்பிக்கப்பட்ட பூமியில் இருக்கும் என்பதை தெளிவுபடுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உதாரணமாக, ஏசாயா 65:17-19 இல், தேவனுடைய ஜனங்கள் புதுப்பிக்கப்பட்ட பரிசுத்த நகரமான எருசலேமில் வசிப்பார்கள் என்று நாம் அறிகிறோம். மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 21:2 இல், இந்தப் புதிய எருசலேம் புதிய பூமியில் இருப்பதைக் காண்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5 இல் யோவான் எழுதியதைக் கவனியுங்கள்:

> பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன் … புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன் … பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்." … சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்!" என்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5 ).

பரலோகத்தில் புதிய எருசலேமை தேவன் தயார் செய்வதை இங்கே காண்கிறோம். புதிய பூமி தயாராக இருக்கும்போது, அவர் புதிய எருசலேமை பூமிக்கு கொண்டுவருவார், அவருடைய ஜனங்கள் மத்தியில் அவர் பரிசுத்த வாசஸ்தலமாக இருப்பார், அவர் புதிய பூமியிலும் வாசம்செய்வார். தேவனின் திட்டம் நம்மை நித்திய காலத்திற்கு பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதாக இருந்தால், புதிய பூமி தேவையில்லை. ஆனால் நாம் இங்கே வாசிக்கையில், தேவன் நம்முடைய நித்திய வசிப்பிடத்திற்கென்று உலகம் உட்பட அனைத்தையும் புதிதாக உருவாக்குகிறார்.

கிபி 354 முதல் 430 வரை வாழ்ந்த ஹிப்போவின் பிரபல பிஷப் ஆரம்பகால சபைப் பிதாவான அகஸ்டின், தனது புகழ்பெற்ற படைப்பான *தி சிட்டி ஆஃப் காட்,* புத்தகம் 20, அத்தியாயம் 16 இல் புதிய பூமியைப் பற்றி எழுதினார்:

> உலகமே சில சிறந்த விஷயங்களுக்குப் புதுப்பிக்கப்படுவதால், அது மனிதர்க்கு பொருத்தமாக இருக்கிறது, சில நல்ல விஷயங்களுக்கென்று அவர்கள் தங்கள் மாம்சத்தில் புதுப்பிக்கப்படுகிறார்கள்.

> தேவன் எல்லாவற்றையும் புதுப்பிக்கும் ஒரு நாள் வருகிறது. இயேசு குறிப்பாக, அவருடைய சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்த அழகான வார்த்தைகளில் இதை நாம் பார்க்க முடியும், "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம்

> வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல போல பூமியிலும் செய்யப்படுவதாக.” அந்த முக்கியமான, மைய, அடிப்படை கிறிஸ்தவ யோசனை என்னவென்றால், நாம் இப்போது பரலோக நடைமுறைகள் பூமிக்குரிய நடைமுறைகளாக மாறும் வரை காத்திருக்கிறோம் – தேவன் பரிசுத்தமடையும் போது, பரலோகத்தில் விஷயங்கள் செய்யப்படும் விதம், எல்லாம் சரியாக இருக்கும்போது, மற்றும் நீதி மற்றும் மகிமையும் உண்மையும், அன்பும் ஆட்சி செய்கிறது. கிறிஸ்தவர்களாகிய நமது உறுதியான நம்பிக்கை, பரலோகத்தின் நிஜங்கள் பூமிக்குரிய யதார்த்தங்களாக மாறும் என்பதே, மேலும் இதுவே புதிய சிருஷ்டிப்பு என்றும் நமது நித்திய வீடென்றும் வேதம் உறுதியளிக்கிறது.
>
> Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

புதிய பூமி நம் இறுதி வீடாக இருக்க வேண்டும் என்ற உண்மையை உணரவில்லையென்றால், யதார்த்தத்தின் சரீரப்பிரகாரமான அம்சங்களிலிருந்து நம்மை எளிதில் விலக்கிக்கொள்வோம், மேலும் பூமியில் சரீரத்துடன் இருப்பது ஒரு ஆசீர்வாதத்தை விட கஷ்டம் என்று நினைப்பது எளிதாகி விடும். ஆனால் பூமியே நமது நிரந்தர வீடாக இருக்க வேண்டும் என்பதை நாம் அங்கீகரிக்கும் போது, இந்த பூமியை வரவிருக்கும் உலகில் தேவன் நமக்கு வைத்திருக்கும் அழகான மற்றும் ஆசீர்வாதத்தின் முன்னறிவிப்பாகவும் நாம் பார்க்க முடியும்.

# முடிவுரை

*அப்போஸ்தல பிரமாணம்* குறித்த பாடத்தில், நாம் இரட்சிப்பைக் குறித்த தலைப்பில் கவனம் செலுத்தியுள்ளோம். பாவத்தின் பிரச்சனை, தெய்வீக கிருபையின் ஈவு மற்றும் மனித பொறுப்பின் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் பாவ மன்னிப்பு பற்றி நாம் பேசியுள்ளோம். மரணத்தின் சாபம், ஜீவனின் நற்செய்தி மற்றும் கிறிஸ்துவில் மீட்பு ஆகியவற்றைப் பார்த்து சரீர உயிர்த்தெழுதலின் கோட்பாட்டை நாம் ஆராய்ந்தோம். நித்திய ஜீவனின் இயல்பு, அதன் நேரம், தரம் மற்றும் அதன் இடம் உட்பட்ட விஷயங்களை கண்டோம்.

இரட்சிப்பு பற்றிய இந்த பாடத்தில், சபையானது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பராமரித்து வந்த நம்முடைய பொதுவான கிறிஸ்தவ

அறிக்கையின் அத்தியாவசிய கூறுகளின் மீது *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* கவனம் செலுத்தியது என்பதை நாம் பார்த்தோம். மற்ற பாரம்பரியம் மற்றும் ஸ்தாபனங்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுடன் பேசும்போது இந்த பொதுவான கோட்பாடுகளை நாம் மனதில் வைத்திருந்தால், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* உறுதிப்படுத்துபவர்களுடன் ஒற்றுமையைத் தொடரவும், அவ்வாறு செய்யாதவர்களை சரிசெய்யவும் நமக்கு ஒரு உறுதியான அடித்தளம் கிடைக்கும். மேலும், இரட்சிப்பின் இந்த அத்தியாவசிய கோட்பாடுகளில் நாம் கவனம் செலுத்தும்போது, இந்த உலகில் தேவன் என்ன செய்கிறார் என்பதை பரந்த அளவில் பார்க்கவும், அவருடைய அன்பு மற்றும் கிருபைக்காக அவரைப் போற்ற அதிகதிகமான காரணங்களைக் கண்டறியவும் இது உதவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.